பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆவணி 15 வெள்ளிக்கிழமை (31-08-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:278

## யுத்தநிறுத்தம் மற்றும் பேச்சுக்கு
# அரசு விடுத்த அழைப்பை புலிகள் நிராகரித்தனர்!



## அரசின் யோசனை ஏமாற்றுவித்தை என வர்ணிக்கின்றார் பாலசிங்கம்

லண்டன்,ஓகஸ்ட்31

**பரஸ்பரம் இணக்கப்பாடு கண்ட போர்நிறுத்தமும் அதனைத் தொடர்ந்து பேச்சும் என ஸ்ரீலங்கா அரசாங்கம் விடுத்த அழைப்பை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் நிராகரித்துள்ளது.**

**தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நேற்று 'தமிழ் நெட்' இணையத்திற்கு விடுத்த அறிக்கையில் அரசின் யோசனையை ஓர் அரசியல் ஏமாற்றுவித்தை என வர்ணித்தார்.**

"தீவிரமடைந்துவரும் அரசியல் நெருக்கடியிலிருந்து சிங்கள மக்களதும் சர்வதேச சமூகத்தினதும் கவனத்தை திசைதிருப்பும் நோக்கிலேயே இந்த சமாதானத்திற்கான சமிக்ஞை காட்டப்படுகிறது. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்து, ஊழலும் சீர்கேடும் மலிந்து, ஆட்டம்காணும் நிலையிலுள்ள இந்த அரசுடன் நாம் பேச்சுக்களை நடத்த தயாராக இல்லை" என பாலசிங்கம் குறிப்பிட்டார்.

"மூழ்கிக் கொண்டிருக்கும் கப்பலில் ஏறிக்கொள்வதற்கு நாம் அப்படி முட்டாள்கள் அல்லர்" என்றும் அவர் தெரிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியாவில் தேடுதல்

வவுனியா,ஓக.31

வவுனியா நகரப்பகுதி நேற்றுப் பகல் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு பாரிய தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. -

இந்தத் தேடுதல் நடவடிக்கையின் போது இரண்டு யுவதிகள் உட்பட ஐந்து பேர் கைது செய்யப்பட்டு விசாரணைகளுக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

பள்ளிவாசல் சந்தியில் இருந்து கந்தசுவாமி கோயில் வரையான சகல பாதைகளும், ஒழுங்கைகளும் மூடப்பட்டு தீவிர தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் தேடுதல் சமயம் நகருக்குள் வாகனங்கள் செல்வதற்கும் அனுமதிக்கப்படவில்லை.

(உ-10)

## 'தகுதிகாண்' அரசு யோசனைக்கு அரசின் பதில் இன்று கிடைக்கும்
### ஜே.வி.பி. தரப்பு நம்பிக்கை

கொழும்பு,ஒக.31

'தகுதிகாண் அரசு' ஒன்றை அமைப்பது தொடர்பாகத் தாங்கள் முன்வைத்துள்ள யோசனை குறித்து அரசுத் தரப்பிடமிருந்து இன்றைய தினைதுக்கு முன்பதாக சாதகமான பதில் கிடைக்கும் என்று தாங்கள் நம்புவதாக ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச நேற்றிரவு உதயனுக்கு தெரிவித்தார்.

அரசுத் தரப்பு இன்னமும் நேரடியாக தம்முடன் தொடர்பு கொள்ளவில்லை என்றும் -

இன்று மாலைக்குள் பதில் அனுப்பி எம்முடன் பேச்சு நடத்த அரசு தயாராகி வருவதாகத் தகவல் கிடைத்துள்ளது என்றும் - அவர் மேலும் சொன்னார்.

இந்த விவகாரம் தொடர்பாக அண்மையில் பிரதமர் ஒரு கடிதத்தைத் தங்களுக்கு அனுப்பியதாகவும் -

தங்கள் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி தாங்கள் ஒரு பதிலை அவருக்கு அனுப்பி வைத்ததாகவும் - ஜே.வி.பி.யின் சிரேஷ்ட தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

அடுத்த இரண்டு நாள்களுக்குள் இந்த விடயம் குறித்து ஜே.வி.பி அரசுத் தரப்புடன் மீண்டும் ஒரு சுற்றுப் பேச்சு நடத்துவதற்கு அதிக வாய்ப்புகள் இருப்பதாகவும் அவர் சொன்னார்.

இதற்கிடையில் -

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் உரையாற்றிய அமைச்சர் மங்கள சமரவீர, பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கும் ஜே.வி.பிக்குமிடையில் பேச்சுகள் வெற்றிகரமாக நடந்திருப்பதாகக் குறிப்பிட்டார்.

"ஜே.வி.பி. பதவிகள் எதையும் கோரவில்லை. நாட்டின் நலன் கருதி சில செயல்திட்டங்களையே முன்வைத்துள்ளது" - என்றும் அவர் அங்கு சொன்னார்.

(உ)

## ஜே.வி.பியின் நிபந்தனைகள் பற்றி ஜனாதிபதி நேற்று ஆலோசனை

கொழும்பு,ஒக.31

தகுதிகாண் அரசு ஒன்று அமைப்பதற்கு ஆதரவு வழங்க ஜே.வி.பி. முன்வைத்துள்ள கோரிக்கைகள் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றிரவு சிரேஷ்ட அமைச்சர்களுடன் பேச்சுக்களை நடத்தியதாக இணையத்தளம் ஒன்று தெரிவித்தது.

நேற்று மாலை ஆரம்பமான இந்தப் பேச்சுக்கள் நள்ளிரவு வரை தொடர்ந்ததாகவும் -

அங்கு எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து தகவல்கள் ஏதும் வெளிவரவில்லை என்றும் - அந்த இணையத்தளம் மேலும் தெரிவித்தது.

ஜே.வி.பியுடன் மீண்டும் இன்று பேச்சுக்களை அரசுத்தரப்பு நடத்தக்கூடிய சூழ்நிலை நிலவுவதாக அரசதரப்புப் பேச்சாளர் ஒருவர் கூறியதாக வெளிநாட்டு ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. (ஒ-3)

## கல்முனையில் குண்டுவெடிப்பு 2 பொலீஸார், சிவிலியன் பலி!

மட்டக்களப்பு,ஒக.31

மட்டக்களப்பு கல்முனைப் பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் இரு பொலீஸாரும் சிவிலியன் ஒருவரும் உயிரிழந்தனர்; ஏழு பொதுமக்கள் காயமடைந்தனர்.

காலை 8.30 மணியளவில் நடைரோந்தில் ஈடுபட்ட இரு பொலீஸார், அங்கு அநாதரவான நிலையில் சுவர் ஒன்றில் சாய்த்து வைக்கப்பட்டிருந்த சைக்கிளை சோதனை செய்ய முயற்சித்ததாகவும் -

அந்தச் சமயத்தில் சைக்கிளில் பொருத்தப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் இரு பொலீஸாரும் அந்த இடத்திலேயே உயிரிழந்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இந்தக் குண்டுவெடிப்பின்போது

(12 ஆம் பக்கம் பார்க்க)

### புலிகளுடன் பேசத் தயார் என்ற
## அரசின் அறிவிப்புத் தொடர்பாக தமிழ்க் கட்சிகள் அவநம்பிக்கை

கொழும்பு,ஒக.31

விடுதலைப் புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றின் அடிப்படையில் யுத்தநிறுத்தம் செய்து பேச்சு நடத்தத் தயாராக இருப்பதாக அரசு விடுத்துள்ள அறிவிப்புக் குறித்து தமிழ்க் கட்சிகள் அவநம்பிக்கை வெளியிட்டுள்ளன.

ஐ.தே.கட்சி, ஜே.வி.பி. ஆகியவற்றுடன் இடம்பெற்ற பேச்சுக்கள் தோல்வியடைந்த நிலையில் நெருக்கடி நிலையில் உள்ள அரசு எமது ஆதரவை பெறுவதற்காகவே இந்த அறிவிப்பை விடுத்துள்ளது என்று தமிழ்க் கட்சிகள் தெரிவித்துள்ளன.

ஆட்சியைத் தொடர்வதற்காக அரசு கடைசிநேர முயற்சியாகவே புலிகளு

(12 ஆம் பக்கம் பார்க்க)

### திவ்வியனுக்கு எதிரான வழக்கு
## பகுப்பாய்வாளரின் அறிக்கை பெறாமல் ஆயுதங்களை அழிக்க அனுமதிக்க முடியாது
### யாழ். நீதிவான் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக.31

யாழ்பல்கலைக்கழக விஞ்ஞான பீட இறுதி வருட மாணவன் கிருஷ்ணசாமி திவ்வியனிடம் இருந்து படையினரால் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டு நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆயுதங்கள் எதனையும் அரச இரசாயனப் பகுப்பாய்வாளரால் பரிசோதிக்கப்பட்டு அவரிடம் இருந்து அறிக்கை பெறாமல் அழித்து விட இந்த நீதிமன்றம் ஒருபோதும் அனுமதிக்காது.

- இவ்வாறு யாழ்.நீதிவான் ஆர்.ரி. விக்னராஜா நேற்று காங்கேசன்துறைக் குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகா

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றைக் கலைக்கக் கோரி எதிரணியினர் பிரேரணை சமர்ப்பிப்பு

கொழும்பு,ஒக.31

நாடாளுமன்றத்தைக் கலைக்குமாறு கோரும் பிரேரணை ஒன்றை நாடாளுமன்ற நிகழ்ச்சிநிரலில் சேர்க்கக் கோருவது என்று எதிர்க்கட்சிகள் முடிவு செய்துள்ளன.

எதிர்வரும் 7 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும் போது கூட்ட நிகழ்ச்சி நிரலில் இந்தப் பிரேரணையைச் சேர்க்க எதிர்க்கட்சிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

இந்தப் பிரேரணையைத் தனிநபர் பிரேரணையாக ஜே.வி.பி கொண்டு வரவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

தேர்தல் நடந்து ஒரு வருட காலத்துக்குள் நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்க முடியாது. ஆனால் இது தொடர்பாக நாடாளுமன்றம் பெரும்பான்மையுடன் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினால் ஜனாதிபதி தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு உத்தரவிட முடியும் என்று கூறப்படுகிறது.

(ஒ-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# புலிகளுடன் பேசத் தயார் என அரசு கூறுவது ஏமாற்றும் செயல்!

## ஜோசப் பரராஜசிங்கம் கூறுகின்றார்

மட்டக்களப்பு,ஓக.31

அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் பலவீனமடைந்து ஆட்டம் கண்டுள்ள சந்திரிகாவின் அரசு விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கும், போர்நிறுத்தம் செய்வதற்கும் தயார் எனக் கூறுவது தமிழ்மக்களை ஏமாற்ற முயலும் செயலாகும் என மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக்கட்சியுடனான பேச்சுகள் தோல்வியடைந்த நிலையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கும் போர்நிறுத்தம் செய்வதற்கும் தயார் என வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் வெளியிட்டுள்ள அறிவிப்புத் தொடர்பாக ஜோசப் பரராஜசிங்கத்திடம் கருத்துக் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது அரசாங்கத்தின் மற்றுமொரு ஏமாற்றுவித்தை என்றும் அவர் சொன்னார். ஐக்கிய தேசியக்கட்சியுடன் பேசி தோல்வியடைந்த பின் மிகவும் பலவீனமாக ஆட்டம் கண்டுள்ள சந்திரிகா அரசுடன் மிகவும் பலமான நிலையில் உள்ள விடுதலைப் புலிகள் பேசக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்படாது என அவர் மேலும் தெரிவித்தார்.

"தமிழ் மக்களின் துன்பங்கள், துயரங்கள் நீங்கவேண்டும்; சமாதானம் ஏற்படவேண்டும் என்னும் நல்லெண்ணத்தோடு நோர்வே நாட்டின் சமாதான முயற்சியை ஆதரித்து 4 மாதங்கள் தொடர்ச்சியாக போர் நிறுத்தத்தை மேற்கொண்டு புலிகள் நேசக்கரம் நீட்டியவேளையில் அதை உதாசீனம் செய்து கடுமையான போரில் ஈடுபட்ட அரசுடன் விடுதலைப் புலிகள் இப்போது பேசுவார்களா என்பது கேள்விக்குறியே.

"சமாதான முயற்சியில் மத்தியஸ்தம் செய்த நோர்வே அரசின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை சந்தித்துப் பேசிய முதலாவது வெளிநாட்டு மத்தியஸ்தராவார். விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் ஆகியோருடன் தொடர்ச்சியாக பேச்சு நடத்தி நம்பிக்கையைப் பெற்ற எரிக் சொல்ஹெய்மை ஓரம் கட்டிய அரசுடன் விடுதலைப் புலிகள் எப்படி பேச முன்வருவார்கள்?

"எனவே பலவீனம் அடைந்துள்ள அரசு தமிழ் மக்களை ஏமாற்றுவதற்கு இப்படிப்பட்ட அறிக்கைகளை விடுகின்றது - என ஜோசப் எம்.பி மேலும் தெரிவித்தார். (உ-21)

## இந்தியாவில் இலங்கை மீனவர் விடுதலை

கொழும்பு,ஓக.31

இந்தியாவின் கேரள மாநிலம், கொச்சின் சிறையில் கடந்த 20 மாதங்களுக்கு மேலாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த 5 இலங்கை மீனவர்கள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்கள் 5 பேரும் இன்று கொழும்புக்கு விமான மூலம் வரவுள்ளனர். மேலும் 30 இலங்கை மீனவர்கள் தமிழ்நாடு மற்றும் அந்தமான் தீவு ஆகிய இடங்களில் உள்ள சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தேசிய மீனவர் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-10)

## யாழ். போதனா வைத்தியசாலையில் நிரந்தர நியமன முறை; சிற்றூழியர்கள் விசனம்

யாழ்ப்பாணம்,ஓக.31

யாழ் போதனா வைத்தியசாலையில் பணியாற்றிய அமைய சிற்றூழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்ட முறை குறித்து விசனம் தெரிவிக்கப்பட்டது.

1999 ஆம் ஆண்டு ஜனவரியில் தற்காலிக நியமனம் பெற்ற 28 பேரில 27 பேருக்கு, தற்காலிக நியமனம் வழங்கப்பட்ட திகதியில் இருந்து பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, 1997 இல் தற்காலிக சிற்றூழியர்களாக பணியில் சேர்ந்தோருக்கு 1999 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இருந்தே பணி நிரந்தரம் வழங்கப்பட்டது.

இதனால், முதலில் தற்காலிக ஊழியர்களாகப் பணியில் சேர்ந்தவர்களை விட, இரு வருடங்கள் தாமதமாகத் தற்காலிகப் பணியில் சேர்ந்தவர்கள் தற்போதைய நிரந்தர நியமனம் வழங்கல் முறையால் 11 மாதங்கள் பணிமூப்புப் பெற்றுள்ளனர்.

இதன் காரணமாக எதிர்காலத்தில பதவியுயர்வு போன்ற விடயங்களில், முதலில் தற்காலிகப் பணியில் சேர்ந்தவர்கள் பாதிப்படைய நேரிடும் என்று பாதிக்கப்பட்டவர்கள் விசனம் தெரிவித்தனர்.

(ஓ-15)

## பனங்குளவிகளின் படையெடுப்பால் கொக்குவிலில் நேற்றுப் பதற்றம்

### பாதசாரிகளை விரட்டிக் கொட்டின

யாழ்ப்பாணம்,ஓக.31

கொக்குவில் ஸ்ரேசன் வீதிப் பகுதியில் பனங்குளவிகளின் படையெடுப்பால் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் பதற்றம் நிலவியது.

திடீரென்று பெரும் கூட்டமாக ஸ்ரேசன் வீதியில் திரண்டு பறந்த குளவிகள் தெருவில் நடமாடியோரை விரட்டி விரட்டிக் கொட்டின.

இதனால் பாதசாரிகள் அலறியடித்து ஓட்டம் பிடித்தனர். இதனையடுத்து அந்த வீதி வெறிச்சோடியது.

பனங்குளவிகளின் தாக்குதல் குறித்து அறியாத திருமண ஊர்வலம் ஒன்றின் வாகனங்கள் அவ்வீதி வழியே வந்தன. அதில் மோட்டார் சைக்கிளில் வந்த பெண்ணை உட்பட இருவரை குளவிகள் மொய்த்துக் கொண்டு கொட்டித் தீர்த்தன.

அதனால் அவர்கள் செய்வதறியாது நடுவீதியில் உடகார்ந்து விட்டனர்.

கார்களில் வந்தவர்களும் கண்ணாடிகளை உயர்த்தி விட்டு உறவினரைக் காப்பாற்ற வழி தெரியாது. கார்னுள் கலங்கிப் போயிருந்தனர்.

அப்போது அப்பகுதி வாசி ஒருவர் தீப்பந்தம் ஒன்றைக் கொளுத்தி குளவிகளை விரட்டி அவர்களைக் காப்பாற்றினார். (ப)

# நாட்டு நலனில் அக்கறையில்லாததால் அரசு - ஐ.தே.க. பேச்சுத் தோல்வி

## சிஹல உறுமய குற்றச்சாட்டு

பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கும் ஐக்கிய தேசிய கட்சிக்கும் நாட்டு நலனில் அக்கறை கிடையாது. உண்மையில் அக்கறை இருந்திருந்தால் பேச்சுக்களில் ஓர் இணக்கம் கண்டு இருப்பார்கள் மேற்படி இரு கட்சிகளும் நாட்டு நலனை விட பதவிகளிலேயே தீவிர அக்கறை செலுத்தியதால்தான் பேச்சு தோல்வியில் முடிந்தது என சிஹல உறுமய தலைவர் திலக கருணாரத்தின தெரிவித்தார்.

நாடு எதிர்நோக்கியுள்ள அரசியல் பொருளாதார நெருக்கடிக்கு தேசிய அரசு ஒன்றே சிறந்த வழி. ஆனால் தேசிய கட்சிகளுக்கிடையில் நடத்தப்பட்ட பேச்சில் ஓர் இணக்கம் ஏற்படாதது கவலைக்குரியது.

இருகட்சிகளும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் பேச்சு நடத்தியிருக்க வேண்டும். ஆனால் பதவிகளைப் பாதுகாக்கும் நோக்கத்துடனும் பதவிகளை கைப்பற்றும் நோக்கத்துடனுமேயே பேச்சு நடத்தியுள்ளனர் என்பதையே காணக்கூடியதாக உள்ளது.

பேச்சு மூலம் நாட்டின் அரசியல் நெருக்கடி நிலையை களைந்து பொருளாதார வளர்ச்சி ஏற்படும் என எதிர்பார்த்திருந்த மக்களுக்கு பெரும் ஏமாற்றமே கிடைத்துள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-3)

## முல்லைத்தீவுக் கடற்பரப்பில் கடற்படையினர் மீது தாக்குதல்

வவுனியா,ஓக.31

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் கடற்படையினர் மீது விடுதலைப் புலிகள் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு தாக்குதல் ஒன்றை மேற்கொண்டதாக வெளிநாட்டு செய்தி ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டது.

இரவு 10.30 மணியளவில் ரோந்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த கடற்படையினரின் அதிவேக டோறா பீரங்கிக் கலன்கள் மீது கடற்புலிகள் வழிமறித்துத் தாக்குதலை மேற்கொண்டதாகவும் -

இத்தாக்குதலின் போது கடற்படையினருக்கு ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரிய வரவில்லை என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம், கடந்த செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவுக் கடற்பரப்பில் கடற்படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் புலிகள் தரப்பில், பூங்குன்றன் (பிரான்ஸிஸ் சூரியகுமார் - முல்லைத்தீவு) என்பவர் கொல்லப்பட்டதாக 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்தது. (ஓ-10)

## ஜனாதிபதி செயலக வளாகத்தில் தொண்டமான் சிலை

கொழும்பு,ஓக.31

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான காலஞ்சென்ற சௌமியமூர்த்தி தொண்டமானின் வெண்கலத்தினாலான சிலை நேற்று ஜனாதிபதி செயலக வளாகத்தில் திறந்து வைக்கப்பட்டது.

நேற்றுக்காலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மறைந்த தலைவரின் சிலையைத் திறந்து வைத்தார். (ஒ-10)

### புலிகளுடன் பேசுவது தவறென்றால்

# கொடிய யுத்தத்தை ஆதரிக்க பௌத்த மதம் அனுமதிக்கிறதா?

## பிக்குகளிடம் நாணயக்கார கேள்வி

கொழும்பு,ஓக.31

"காணாமற்போன படையினரைத் தேடி நாம் வன்னி சென்று விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதை தேசத் துரோகச் செயல் என பௌத்த பிக்குகள் சிலர் கூறுகின்றனர். ஆனால் அப்பாவிப் படையினரைக் கொல்லும் இவ்வாறான கொடிய யுத்தத்தை ஆதரிக்குமாறு பௌத்த சமயத்தில் எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை" என காணாமற்போன படையினரின் பாதுகாவலர் சங்கத் தலைவர் ஈ.பி. நாணயக்கார கூறினார்.

"எமது பிள்ளைகளைத் தேடி நாம் வன்னிக்குச் சென்ற பயணம் மிகவும் பயங்கரமானது. மீண்டும் திரும்பி வருவோம் என்ற நம்பிக்கை சிறிதுமின்றி நாம் இப்பயணத்தை மேற்கொண்டோம். விடுதலைப் புலிகள் எமக்கு சகல உதவிகளையும் வழங்கினர்.

இளைஞர்கள் இலகுவாகக் கிடைக்கும் தொழில் இதுவென்று கருதியே படையில் சேருகின்றனர். ஏனெனில் நம் பொருளாதார நிலைமை அவ்வளவு சீர்கேடான நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது. நாம் வன்னிக்கு சென்ற வழியில் எத்தியோப்பியாவில் உள்ள சிறுவர்களைப் போன்ற பல சிறுவர்கள் எமக்கு கையசைப்பதைக் காணக்கூடியதாக இருந்தது.

இந்த யுத்த நிலைமை நீடித்தால எத்தியோப்பியச் சிறுவர்களைப் போன்ற சிறுவர்களை கொழும்பில் காணக்கூடிய நிலையே ஏற்படும். புலிகள் சமாதானம் மீதான தமது ஆர்வத்தை ஏற்கனவே வெளிப்படுத்தி விட்டனர். ஆனால் சிங்களப் பேரினவாதிகள் தான் சமாதானத்திற்கு முட்டுக்கட்டையாக இருக்கின்றனர்.

பௌத்த பிக்குகள் சிலரும் போரின் மூலம்தான் இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று கூறுகின்றனர். பௌத்த மதம் ஒருபோதும் வன்முறைகளையும் கோரக் கொலைகளையும் அனுமதித்ததில்லை. எனவே அரசாங்கம் புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டும். பேச்சு நடத்த முனைந்தால் குறைந்த நிபந்தனைகளுடன் போரை நிறுத்தலாம் - என்றார்.

## புலிகளுக்கு நிதி சேகரித்தவர் மன்னார் பொலீஸாரால் கைது!

### விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவிப்பு

கொழும்பு,ஓக.31

மன்னார், முருங்கன் பகுதியில் விடுதலைப் புலிகளுக்காக நிதி சேகரித்ததற்காக நேற்றுமுன்தினம் மன்னார் பெரியகடையைச் சேர்ந்த கருப்பையா மாரிமுத்து என்பவர் கைது செய்யப்பட்டதுடன் 6 ஆயிரம் ரூபா பணம் அவரிடம் இருந்து கைப்பற்றப்பட்டதாகவும் விசேட ஊடகத் தகவல் நிலையம் நேற்று வெளியிட்ட களநிலைவர அறிக்கையில் தெரிவித்தது.

மட்டக்களப்பு சித்தாண்டியில் கைவிடப்பட்ட நிலையிலிருந்த வீடொன்றை நேற்றுமுன்தினம் சோதனையிட்ட சமயம், அங்கு வைக்கப்பட்டிருந்த பொறி வெடியொன்று வெடித்ததில் சிப்பாய் ஒருவர் காயமடைந்ததாகவும் -

முருங்கன், வெள்ளாளக்கட்டுவன் என்ற இடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.45 மணியளவில் ரோந்து சென்ற பொலீஸார் மீது கிரனேட் வீசியவர் பொலீஸார் நடத்திய பதில் தாக்குதலில் உயிரிழந்ததாகவும் -

மன்னார், நானாட்டானில் விசேட அதிரடிப் படையினரின் நடவடிக்கையில் நேற்று உயிரிழந்த விடுதலைப் புலி உறுப்பினரின் சடலம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஊடாக விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் -

விசேட ஊடகத் தகவல் நிலையம் மேலும் தெரிவித்தது. (ஒ-10)

## வவுனியாவில் இளைஞர் கைது

வவுனியா,ஓக.31

வவுனியா, பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தைச் சேர்ந்த ஜெயக்குமார் ஜெயகாந்தன் (வயது 26) என்பவர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக, அவரது உறவினர்களுக்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா அலுவலகம் அறிவித்துள்ளது.

(ஒ-10)


## நன்றியுடன் பாராட்டுகின்றோம்

தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலய வீதியில் அமைந்துள்ள ராஜா கிறீம் ஹவுஸ் ஸ்தாபனத்தில் எம்மால் தவறவிடப்பட்ட **கைச்சங்கிலியை கண்டெடுத்து ஒப்படைத்தவருக்கும் ராஜா கிறீம் ஹவுஸ் ஸ்தாபனத்தினருக்கும்** எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

*வளலாய்.* (91769) திருமதி இலட்சுமிகாந்தன்.


## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி நமசிவாயம்

(இளைப்பாறிய பிரதம லிகிதர், சுகாதாரத் திணைக்களம்)

நீர்வேலி மத்தியை வசிப்பிடமாகக்கொண்ட சின்னத்தம்பி நமசிவாயம் (இளைப்பாறிய பிரதம லிகிதர், சுகாதாரத் திணைக்களம்) அவர்கள் நேற்றுமுன்தினம் (29-08-2001) புதன்கிழமை இந்தியாவில் காலமானார்.

இவர் செல்வராணியின் கணவரும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - வள்ளியம்மை தம்பதியரின் ஏகபுத்திரனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் (இளைப்பாறிய ஆசிரியர்) - நாகம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற முத்தம்மாவின் சகோதரனும், இரவீந்திரன் (ஜேர்மனி), புவனேந்திரன் (கனடா), ஞானேந்திரன் (கனடா), சித்திரா, யசோதரா, கலாதரா ஆகியோரின் தந்தையாரும், சிவகுமாரி (மனி), அருட்செல்வி (ஜேர்மனி), கமலினி (கனடா), செல்வரதி (கனடா), புவனேஸ்வரன் (யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரி), ரங்கேஸ்வரன் (கனடா) ஆகியோரின் மாமனாரும், பிரியன், பிரிந்தா, மிதுனா, கார்த்திகன், அனோஜன், திர்பிகா ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை, இராசநாயகம் (இளைப்பாறிய உதவி முகாமையாளர், இலங்கை வங்கி), சபாநாயகம் (அதிபர், நீர்வேலி தெற்கு, இ.த.க. பாடசாலை), குலேந்திரநாயகம் (கிராம அலுவலர், ஆவரங்கால் கிழக்கு) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01-09-2001) சனிக்கிழமை இந்தியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*நீர்வேலி மத்தி,*
*நீர்வேலி.* (91769)

தகவல்:
சித்திரா புவனேஸ்வரன்

# கருப்பையா மூப்பனார் நேற்றுக் காலமானார்



சென்னை,ஓகஸ்ட்31

**தமிழகத்தின் மூத்த அரசியல்வாதியும் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ஜி.கருப்பையா மூப்பனார் (வயது 71) நேற்று அதிகாலை சென்னை மருத்துவ மனையில் காலமானார்.**

**இடுப்பு எலும்பு முறிவுக்கு சிகிச்சை பெறுவதற்காக சென்னை மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருந்த மூப்பனார், அங்கு நிமோனியா ஏற்பட்டு நுரையீரல் செயலிழந்ததால், காலமானாதாக அவருக்குச் சிகிச்சையளித்த மருத்துவர்கள் தெரிவித்தனர்.**

சென்னை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த மூப்பனாருக்கு நிமோனியா ஏற்பட்டு, அவரது நுரையீரல் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது. அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. எனினும் அவரது உடல் நிலை கடந்த சில தினங்களில் மிக மோசமடைந்தது. உடனடியாக அவருக்கு செயற்கைச் சுவாசம் அளிக்கப்பட்டது.

இறுதியில் எந்தவித சிகிச்சையும் பலனளிக்காத நிலையில் நேற்றுக் காலை அவர் மரணமானார்.

அவருக்கு ஒரு மகனும் ஒருமகளும் உள்ளனர்.

1931ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி தமிழகம் தஞ்சாவூரில் உள்ள பாபநாசத்தில் கபிலஸ்தலத்தில் மூப்பனார் பிறந்தார்.

1956 முதல் 1972 வரை கும்பகோணம் சாரணர் சங்க புரவலராக இருந்தார். 1980 முதல் 1989 வரை தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராகவும் பதவி வகித்தார்.

தமிழகத்தின் பெருந் தலைவரான காமராஜரின் விசுவாசத்துக்கு உரியவராக இருந்தவர் மூப்பனார். அவரது மறைவுக்குப் பின்னர் முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியின் நம்பிக்கைக்குரியவராக விளங்கினார்.

1980ஆம் ஆண்டு இந்திராகாந்தி அவரை அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியின பொதுச் செயலாளர் ஆககினார். 1988ஆம் ஆண்டு வரை அவர் இந்தப் பதவியில் தொடர்ந்து இருந்தார்.

1989ஆம் ஆண்டு தமிழக சட்டப்பேரவை உறுப்பினர் ஆனார்.

1996ஆம் ஆண்டு தமிழகத்தில் அ.தி.மு.கவுடன் காங்கிரஸ் கட்சி தேர்தல் கூட்டணி வைத்ததை எதிர்த்து காங்கிரஸில் இருந்து பிரிந்து சென்று தமிழ் மாநிலக் காங்கிரஸ் என்ற புதிய கட்சியை உருவாக்கினார்.

கர்நாடக சங்கீதப் பிரியரான மூப்பனார் ஒரு கிரிக்கெட் ரசிகரும் கூட. சென்னையில் நடைபெறும் முக்கிய போட்டிகள் எவற்றையும் இவர் கண்டுகளிக்கத் தவறுவதேயில்லை.

இறக்கும் வரை மூப்பனார் மாநிலங்கள் அவை உறுப்பினராகவும் இருந்தார். (ம-7)

## மக்கள் திரண்டுவந்து மூப்பனாருக்கு அஞ்சலி

சென்னை,ஓக.31

நேற்று அதிகாலை காலமான மூப்பனாரின் பூதவுடல் சென்னை மருத்துவமனையில் இருந்து அவரது வீட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

வீட்டில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ள மூப்பனாரின் பூதவுடலுக்கு பெரும் எண்ணிக்கையிலான அரசியல் தலைவர்களும் பொதுமக்களும் தமது இறுதி அஞ்சலிகளைச் செலுத்திவருகின்றனர்.

பேச்சாற்றலோ, எழுத்தாற்றலோ, முக வசீகரமோ இல்லாத மூப்பனார், மக்களிடம் எவ்வளவு செல்வாக்குப் பெற்றிருந்தார் என்பதை அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக கூடும் மக்களின் எண்ணிக்கையில் இருந்து புரிந்துகொள்ள முடிகிறது என்று செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

இந்திய நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நேற்று மூப்பனாருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. மூப்பனார் மாநிலங்களவை உறுப்பினராக இருந்தமையால் அவருக்கு அஞ்சலி செலுத்திய பின் மாநிலங்களவை நேற்று ஒத்திவைக்கப்பட்டது. (ம)

# தீவிரவாதிகளுடன் நேபாள அரசு பேச்சு

காத்மண்டு,ஓக.31

நேபாளத்தில் மாவோயிஸ்ட் கிளர்ச்சியாளர்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான உத்தியோக பூர்வப் பேச்சுக்கள் நேற்று தலைநகர் காத்மண்டுவுக்கு அருகே ஆரம்பமாகின.

நேபாள அரசு சார்பில் திட்ட பொதுப் பணித்துறை அமைச்சரும் மாவோயிஸ்டுக்கள் சார்பில் கிருஷ்ண பகதூர் மாகாராஜரும் இந்தப் பேச்சுக்களில் கலந்துகொண்டனர்.

திட்டமிடப்பட்ட அட்டவணை ஒன்றின் அடிப்படையில் இந்தப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவில்லை. எனினும் பேச்சுக்கள் சுமுகமாக இடம் பெற்றன என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

முதற்கட்டப் பேச்சுக்களில் ஏற்படும் முன்னேற்றத்தைத் தொடர்ந்தே அடுத்த கட்டப் பேச்சுக்கள் குறித்து ஆராயப்படும் என்று நேபாள அரசு அறிவித்துள்ளது.

இந்தப் பேச்சுக்கள் மூலம் கடந்த 5 ஆண்டுகளாக நேபாளத்தில் கம்யூனிஸ தீவிரவாதிகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் வன்முறைகள் ஒரு முடிவுக்கு வரும் என்று மக்கள் ஆவலோடு எதிர்பார்ப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (ம-7)

# உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதைத் தவிருங்கள்!

## கம்போடியப் பிரதமர் தூதர்களுக்கு எச்சரிக்கை

கம்போடியாவின் உள்நாட்டு விவகாரங்களில் தேவையற்ற விதத்தில் தலையிட வேண்டாம் என்று அந்த நாட்டுப் பிரதமர் அங்குள்ள வெளிநாடுகளின் தூதுவர்களுக்குக் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஊழல் மோசடி குறித்து கம்போடிய அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் குறித்து அந்த நாட்டிலுள்ள வெளிநாடுகளின் தூதர்கள் சிலர் செய்தி ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

அந்தக் கருத்துக்கள் கம்போடிய அரசை கடும் சீற்றம் கொள்ள வைத்துள்ளது. இதனைத் தொடர்ந்தே பிரதமர் ஹூன் சென் மேற்படி கருத்தை வெளியிட்டுள்ளார்.

"எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தை விமர்சிக்கும் பாணியில் வெளிநாட்டுத் தூதர்களும் அரசாங்கத்தை விமர்சித்துள்ளார்கள். இது அவர்களுக்கும் நல்லதல்ல அரசுக்கும் நல்லதல்ல" என்றார் பிரதமர் ஹூன் சென். (ம-7)

# பாரதீய ஜனதா கூட்டணிக்கு பாரூக் அப்துல்லா ஆதரவு

புதுடில்லி,ஓக.31

தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு தமது கட்சி தொடர்ந்து ஆதரவு வழங்கும் என்று ஜம்மு காஷ்மீர் முதலமைச்சர் பாரூக் அப்துல்லா தெரிவித்துள்ளார்.

ஜம்மு காஷ்மீரில் இடம்பெற்ற தேர்தல்கள் ஜனநாயக முறைப்படி இடம்பெறவில்லை என தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தலைவர்கள் கருத்து வெளியிடுவதைக் கண்டித்து தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு எதிராக அண்மையில் பாரூக் அப்துல்லா கருத்துக் கூறியிருந்தார்.

இதேவேளை -

நாட்டின் தேசிய நலன் கருதி அரசுக்கு தொடர்ந்து ஆதரவு வழங்குவதென முடிவு செய்யப்பட்டுள்ளது என்று பாரூக் அப்துல்லா நேற்று அறிவித்துள்ளார். (ஐ-3)

# மத்திய கிழக்கில் தொடரும் வன்முறை சர்வதேச மோதலாக மாறும் அபாயம்

லண்டன்,ஓக.31

மத்திய கிழக்கில் இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையிலான வன்முறைகள் சர்வதேச மோதல்களுக்கு வழிவகுக்கக் கூடும் என்று சர்வதேச அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இந்த விவகாரத்தில அமெரிக்காவும் அரபு நாடுகளும் ஒன்றுக்கொன்று முரணான போக்குகளுடன் செயற்பட்டுவருகின்றன. இந்த நிலையில் மத்திய கிழக்கில் வன்முறைகள் தொடருமானால் இந்த விவகாரம் சர்வதேச ரீதியிலான மோதல்களுக்கு வழிவகுக்கக்கூடும் என்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

இதேவேளை -

பலஸ்தீன விடுதலை மக்கள் முன்னணியின் தலைவர் முஸ்தபா, ரமழானில் உள்ள அவரது வீட்டில் வைத்து கொல்லப்பட்டுள்ளார்.

இஸ்ரேலியர்கள் ஹெலியில் இருந்து அவரது வீட்டின் மீது நடத்திய ரொக்கட் தாக்குதலிலேயே அவர் உயிரிழந்ததாக பலஸ்தீனர்கள் தெரிவித்தனர்.

தீவிரவாதிகளைத் தேடி அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்ட இஸ்ரேலியப் படையினரே இவர் மீது தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் தரப்பு தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலின் பின்னணியில் அமெரிக்கா இஸ்ரேலுக்கு ஆதரவாகச் செயற்பட்டதாக அரபு நாடுகள் கருதுகின்றன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-7)

# ஆக்கிரமித்த பகுதியிலிருந்து இஸ்ரேலியப் படை விலகியது

ஜெருசலேம்,ஓக.31

இஸ்ரேலியப் படையினர் கடந்த திங்கட்கிழமையன்று ஆக்கிரமித்த மேற்குக்கரை நகரான பேய்ஜ்ஜாலாவில் இருந்து வெளியேறி உள்ளனர்.

தாங்கள் ஆக்கிரமித்த பகுதிகளில் இருந்து டாங்கிகள், கவச வாகனங்கள் சகிதம் இஸ்ரேலியப் படையினர் தமது நிலைகளுக்குப் பின்வாங்கிச் சென்றதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

முன்னதாக, இஸ்ரேலியர்கள் அணைமையில் ஆக்கிரமித்த பலஸ்தீனர்களின் பகுதிகளில் இருந்து வெளியேற வேண்டும் என்று அமெரிக்கா இஸ்ரேலிடம் வலியுறுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேசமயம் -

இஸ்ரேலியப் படைகள் தெற்கு காஸாப் பகுதியைச் சுற்றி வளைத்து முற்றுகையிட்டுள்ளனர். இஸ்ரேல் படையினரின் டாங்கிகள் அப்பகுதி விவசாய நிலங்களுக்குள் புகுந்து பெரும் நாசத்தை விளைவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(ம-7)

# அகதிகள் நாட்டுக்குள் நுழைவதை தடை செய்வது அரசின் கொள்கை

## ஆஸ்திரேலியப் பிரதமர் கூறுகிறார்

சிட்னி,ஓக.31

ஆஸ்திரேலியாவுக்குள் நுழைய அகதிகளுக்கு தடைவிதிப்பது தமது அரசின் கொள்கை என்று அந்த நாட்டின் பிரதமர் தெரிவித்துள்ளார்.

நோர்வேக் கப்பல் மூலம் ஆஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவு கடற்பகுதிக்குள் நுழைந்துள்ள சட்டவிரோத குடியேற்ற வாசிகளுக்கு அகதிகள் அந்தஸ்து வழங்கி, அவர்களை நாட்டுக்குள் ஏற்பது குறித்துக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மத்திய கிழக்கு அகதிகள் தொடர்பாக தமது அரசு கடுமையான விதிமுறைகளைப் பின்பற்றிவருவதாகவும் -

எனினும் முக்கிய சந்தர்ப்பங்களில் மனிதாபிமான அடிப்படையில் இந்தக் கொள்கையில் மாற்றங்கள் செய்யப்படும் என்றும் -

அவர் மேலும் கூறினார்.

இதேவேளை -

கிறிஸ்மஸ் தீவுகளுக்கு அருகே கடலில் நிறுத்தப்பட்டுள்ள நோர்வே சரக்குக் கப்பலில் உள்ள சட்டவிரோத குடியேற்றவாசிகளின் உடல் நிலை மோசமடைந்து வருவதாக கப்பலின் கப்டன் அறிவித்துள்ளார்.

கப்பலில் உள்ள அகதிகளை நாட்டுக்குள் நுழைய விடாமல் தடுத்து வரும் அரசின் செயல் குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை, ஐ.நா. தலைமைச் செயலகம், ஜெனிவாவைச் சர்வதேசக் குழு என்பவற்றிடம் முறையிடப்போவதாக ஆஸ்திரேலியாவில் உள்ள மனித உரிமை அமைப்புக்கள் தெரிவித்துள்ளன. (ம-7)

# முஸ்லிம் பெண்கள் சேலை அணிய காஷ்மீரில் தீவிரவாதக் குழு தடை

புதுடில்லி,ஓக.31

இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் முஸ்லிம் பெண்கள் நாளை முதல் சேலை அணிவதைத் தவிர்க்க வேண்டும் என்று தீவிரவாதக் குழு ஒன்று எச்சரிக்கை விடுத்துள்ளது.

சேலை இஸ்லாமிய மரபுகளுக்கு மாறானது என்பதாலேயே இந்தத் தடை விதிக்கப்பட்டதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

காஷ்மீரில் இதுவரை செயற்பட்டு வந்த தீவிரவாத அமைப்புகள் எவையும் இந்த அறிவிப்பை வெளியிடவில்லை என்றும் -

இனந்தெரியாத புதிய அமைப்பு ஒன்றே இந்த அறிவிப்பை விடுத்துள்ளது என்றும் -

காஷ்மீர் பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த அமைப்பு அண்மையில் சேலை அணிந்து வீதியால் சென்ற பெண்ணொருவரை 'அஸிட்' வீசிக் காயப்படுத்தியதாகவும் பொலீஸார் கூறுகின்றனர்.

சேலை இந்துக்களின் பாரம்பரிய உடை என்று கருதப்படுவதால் அதனை முஸ்லிம் பெண்கள் அணியக் கூடாது என்று இஸ்லாமிய அடிப்படைவாதக் கருத்துக்களைக் கொண்ட தான இந்த அமைப்பு கருதுகிறது என்று தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

# உலகில் 15 நிமிடங்களுக்கு ஒருவர் நிலக் கண்ணிக்குப் பலியாகின்றார்

லண்டன்,ஓக.31

உலகில் ஒவ்வொரு 15 நிமிடங்களுக்கு ஒருவர் என்ற வீதத்தில் கண்ணிவெடிக்குப் பலியாகிக் கொண்டிருக்கின்றனர்.

நிலக் கண்ணிகளைத் தடை செய்வதற்கான சர்வதேச இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உலகில் 25 நாடுகளில் மோதல்கள் இடம்பெற்றுவருகின்றன. 15 அரசாங்கங்களும் பல கிளர்ச்சி அமைப்புக்களும் தமது யுத்தத் தேவைகளுக்காக நிலக்கண்ணிகளைப் பயன்படுத்தி வருகின்றன.

1997ஆம் ஆண்டில் நிலக்கண்ணி வெடிகள் தொடர்பான சர்வதேச உடன்பாடு கைச்சாத்தானது. அதனைத் தொடர்ந்து உலகில் நிலக்கண்ணிகளின் உற்பத்தி குறைந்துள்ளது. எனினும் நிலக் கண்ணிகளின் பாவனையை முற்றாக ஒழிப்பதற்கு மிகக் கடுமையாகப் போராட வேண்டி உள்ளது.

90 நாடுகள் நிலக்கண்ணிகளால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. நிலக்கண்ணிகளை ஒழிப்பது தொடர்பான ஒப்பந்தத்தில் உலகின் 118 நாடுகள் கைவெழுத்திட்டுள்ளன. எனினும் அமெரிக்கா, ரஷ்யா, சீனா, இந்தியா, பாக்கிஸ்தான் ஆகிய அணு ஆயுத வல்லமையுள்ள நாடுகள் இது வரை இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை.

அவற்றையும் இந்த ஒப்பந்தத்தில் உள்ளீர்ப்பதற்கு நிலக் கண்ணிகளை தடை செய்வதற்கான அமைப்பு கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

- இப்படி அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## சிங்கப்பூரில் நடைபெறவுள்ள
# உலக தமிழாசிரியர் மாநாட்டுக்கு யாழ். பிரதிநிதிகளுக்கும் அழைப்பு

சிங்கப்பூரில் நடைபெறவுள்ள ஐந்தாவது உலகத் தமிழாசிரியர் மாநாட்டுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி அ. சண்முகதாஸ், ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் 6ஆம், 8ஆம் திகதிகளில் நடைபெறும் இந்த மாநாட்டில் ''இலங்கையில் தமிழ் இலக்கியம் கற்பித்தலில் எதிர்நோக்கும் சில பிரச்சினைகள் பற்றிய பொதுவான ஆய்வு'' என்னும் தலைப்பில் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் ஆய்வுக்கட்டுரை ஒன்றைச் சமர்ப்பிக்கவுள்ளார்,

உலகத் தமிழறிஞர்கள் பலரும் கலந்துகொள்ளும் இந்த மாநாட்டின் மூன்றாம் நாள் நிகழ்வின் ஒரு செயல் அமர்வுக்குப் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமை வகிக்கவுள்ளார். (க–4)

## பளைப் பிரதேசத்தைச் சேர்ந்த
# 'உ' அட்டை வைத்திருப்போர்க்கு நிவாரண அனுமதிப் பத்திரங்கள்

தென்மராட்சி, ஓக. 31

பளைப் பிரதேசத்தைச் சேர்ந்த 'உ' பங்கீட்டு அட்டை வைத்துள்ள வர்த்தகர்கள், குறைந்த வருமானம் பெறும் அரச உள்ளூராட்சி கூட்டுறவு திணைக்களங்களில் பணியாற்றுவோர் மற்றும் ஓய்வூதியம் பெறுவோர் ஆகியோருக்கான ஓகஸ்ட் மாதத்திற்குரிய நிவாரண அனுமதிப் பத்திரங்கள் பளைப் பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்டு வருகின்றன.

நிவாரண மீளாய்வின் போது பாதிக்கப்பட்டவர்களுக்கே 'உ' அட்டை எழுதப்பட்டு அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டு வருவதாகவும் இவர்களுக்கு மீளாய்வின் பின்னர் கடந்த மே, ஜூன், ஜூலை ஆகிய மாதங்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை எனவும் —

வடமராட்சியில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு பளை ப.நோ.கூ. சங்க நெல்லியடிக் கிளையில் நிவாரண உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க–117)

## 'கோமாரி'யில் சிமெந்து

யாழ்ப்பாணம், ஓக. 31

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த 'கோமாரி' கப்பலில் சிமெந்து கூட்டுத்தாபனம் மற்றும் தனியாருக்கான சிமெந்து எடுத்து வரப்பட்டுள்ளது.

அத்துடன் இந்தக் கப்பலில் டிராக்டர்கள், வான்ட் மாஸ்ரர்கள், கார்கள், வான்கள் போன்ற வாகனங்களும் எடுத்து வரப்பட்டுள்ளன. (க–4)

## தொண்டர் ஆசிரியருக்கு நிரந்தர நியமனம்

வடமராட்சி கிழக்கு, ஓக. 31

தொண்டர் ஆசிரியர்களாக 1998 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் கடமையாற்றியவர்களுக்கே படிப்படியாக நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

இவர்களில் முதற்கட்டமாக யாழ். மாவட்டத்தில் 35 பேருக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. (க–182)

## பாரவூர்திகளைத் தவிர்ந்த ஏனைய
# சாரதி அனுமதிப் பத்திரங்கள் நாளை முதல் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், ஓக. 31

யாழ். குடாநாட்டில் மோட்டார்சைக்கிள், கார், டிராக்டர், ஓட்டோ ஆகிய வாகனங்களுக்கான சாரதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கும் பணிகள் நாளை சனிக்கிழமை முதல் மீண்டும் ஆரம்பமாகின்றன.

சாரதி அனுமதிப்பத்திரங்களைப் பெற விரும்புவோர் அது தொடர்பான விண்ணப்பப் படிவங்களை யாழ். செயலகத்தில் இயங்கும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதே வேளை —

குடாநாட்டில் பாரஊர்திகளுக்கான சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்காக விண்ணப்பிப்பவர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்கமுடியாதநிலை காணப்படுவதாகவும் —

அனுமதி பெற்ற பாரஊர்தி சாரதிப் பயிற்சிப்பாடசாலைகள், குடாநாட்டில் இயங்காமையே இதற்குக் காரணம் என்றும் —

அவர் தெரிவித்தார். (க–7–6)

## தங்கச் சங்கிலியை அறுக்க முயன்ற இருவர்பிடிபட்டனர்

வடமராட்சி கிழக்கு, ஓக. 31

வீதியில் சென்றுகொண்டிருந்த வயோதிப மாதுவின் தங்கச் சங்கிலியை அறுத்தெடுக்கமுற்பட்ட இருவரை, இளைஞர்கள் துரத்தி மடக்கிப்பிடித்து நையப்புடைத்தார்கள்.

இச் சம்பவம் புலோலி மேற்கில் கடந்த திங்கட்கிழமை இரவு 7.30 மணியளவில் இடம்பெற்றது. (க–182)

## கிரிக்கெட் சுற்றுப் போட்டி

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் யாழ். கொய்யாத்தோட்ட சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது. (க–4)

# இடம்பெயர்ந்த மக்களுக்கு மணற்காட்டில் 43 வீடுகள்

வடமராட்சி கிழக்கு, ஓக. 31

வடமராட்சி கிழக்கிலுள்ள மணற்காடு, பொற்பதி ஆகிய இடங்களில் வாழும் இடம்பெயர்ந்த மக்களுக்கு 43 வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவுள்ளன.

யூ.என்.எச்.சி.ஆர். (UNHCR) நிறுவனத்தின் அனுசரணையுடன் இந்த வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

1990 ஆம் ஆண்டு பலாலி, மயிலிட்டி ஆகிய இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து இந்தப் பகுதிகளில் வாழும் மக்களுக்கே தலா 1 லட்சம் ரூபா செலவில் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. (க–182)

# இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாப்புச் சீர்திருத்தக் கருத்தரங்கு
## 8, 9 ஆம் திகதிகளில் தம்புள்ளையில்

வடமராட்சி கிழக்கு, ஓக. 31

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாப்பு திருத்தியமைக்கப்படவுள்ளது.

இந்த யாப்புச் சீர்திருத்தம் சம்பந்தமான கருத்தரங்கு தம்புள்ளையில் எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமையும், 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் கலந்துகொள்வதற்காக இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தின் யாழ். கிளையிலிருந்து கொழும்பு பொதுச்சபைக் கூட்டத்திற்குத் தெரிவாகியுள்ள உறுப்பினர்கள் எதிர்வரும் 6 ஆம் திகதி செஞ்சிலுவைக் கப்பலில் பயணமாகவுள்ளார்கள். (க–182)

[ எம் மக்களின் உயிர்களுக்கு நாமே உயிர்க்கொல்லிகள் ]

# கிருமிநாசினி விசிறப்பட்ட கையோடு சந்தைகளுக்கு வந்துவிடும் மரக்கறி!

## விவசாயத்துறைத் தலைவர் எச்சரிக்கை

கிருமிநாசினி விசிறப்பட்டு மூன்று நாள்கள் கழியும் முன்பே மரக்கறி வகைகள் அறுவடை செய்யப்பட்டு குடாநாட்டுச் சந்தைகளில் விற்பனைக்குக் கொண்டு வரப்படுகின்றன.

இவ்வாறு கொண்டு வரப்படுகின்ற மரக்கறி வகைகளை உண்பதால் நஞ்சுத்தன்மையுடன் கூடிய மருந்து வகைகள் எமது உடலுக்குள் சென்று விடுகின்றன. இதன் மூலம் எமது மக்களின் உயிர்களுக்கு நாமே உயிர்க் கொல்லிகளாக மாறி விடுகின்றோம்.

இவ்வாறு எச்சரிக்கை செய்துள்ளார் யாழ். பல்கலைக்கழக விவசாய உயிரியல் துறைத் தலைவர் கு. மிகுந்தன்.

மனித முன்னேற்ற நடுநிலையத்தின் விழிப்புணர்வுக்குழு ஏற்பாடு செய்த வேளாண்மியக் குழுவின் சமாச உறுப்பினர்களுக்கான பயிற்சிப்பட்டறை ஒன்று அண்மையில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இந்தப் பாசறையில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:–

விவசாயபயிர்களுக்கு பயன்படுத்தப்படும் கிருமி நாசினிகள் மரக்கறிகளுக் கூடாக உடலுக்குள் இலகுவாகப் புகுந்து மனித உயிர்க் கொல்லியாக மாறிவிடுகிறது.

தண்ணீரில் இலகுவாகக் கரைய முடியாத மருந்துகள் எம் உணவால் உடலின் கொழுப்புக்களால் கரைந்து விடுகின்றன. இதன் மூலம் எமது மக்களின் அழிவுகளுக்கு நாமே எதிரிகளாகலாமா?.

இன்றைய சூழலில் விவசாயிகளின் நேரடி அனுபவங்களையும் விவசாய நடைமுறைகளையும், ஆய்வுகளையும் நேரடியாகக் கலந்துரையாடி தீர்வுகாண யாழ். பல்கலைக்கழகத்தில் யாழ். தாந்தம் யாழ். மாவட்ட விவசாயக்கழகத்தின் 257 பிரதிநிதிகள் ஒன்று கூடி முடிவு வகுக்கின்றனர்.

இந்த ஒன்று கூடல்களில் இளவாலை வேளாண்மிய சமாசத்தின் உறுப்பினர்களும் கலந்து கொள்ள 'கியூடெக்' நிறுவனத்தின் ஊடாக அழைப்பு விடுக்கின்றேன்.

போரின் அழுத்தங்களால் எமது விவசாயிகள் தமது வளங்களை இழந்த போதிலும் எமது விவசாயிகளின் முயற்சிகள் தொடரப் பலவழிகளிலும் பக்கத்துணையாகநின்று ஊக்கமளித்த அரசசார்பற்ற நிறுவனங்களின் வரிசையில் கியூடெக் நிறுவனத்தின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும்.

எமது விவசாயிகள் சிலர் விவசாய வழிமுறைகள் எல்லாம் தமக்குத் தெரியும் என்ற நோக்கில் அலட்சியமாகச் செயற்படுவதால் பெரும் நஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். இதுமிகவும் கவலைதரும் ஒரு விடயமாகும் — என்றார்.

விவசாயபீட விரிவுரையாளர் ஜெயசீலன் அங்கு உரையாற்றுகையில்,

விவசாயிகள் பயன்படுத்தும் பீடைநாசினிகளில் சிகப்பு, மஞ்சள் நிற 'லேபல்'களில் வரும் பீடைநாசினிகள் அதிக நச்சுத்தன்மை கொண்டவையாகும். இதனால் எமது மண்ணும், நீரும் நிலத்தின் பயிர் வளர்ச்சியும் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. இதனால் இவற்றைப் பயன்படுத்துவதை விவசாயிகள் குறைத்துக் கொள்ள வேண்டும் — என்றார்.

இந்தப் பாசறையில் இனவாலைப்பகுதி விவசாய பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர். (க–6)

# சமய சந்திகளில்

யாழ்ப்பாணம், ஓக. 31

நல்லூர் ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள் பிருந்தாவன பிரவேச விழா இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 4 ஆம்திகதி செவ்வாய்க்கிழமை வரை நடைபெறவுள்ளது. (க–4)

★ ★ ★

அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிதொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 9 ஆம் திகதிமுற்பகல் 10.45 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் காலை 10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (க–4)

★ ★ ★

அராலி அகாயக்குளம் விநாயகர் தேவஸ்தான மணவாளக்கோல மஹாசங்காபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு 'கணபதி கடாட்சம்' என்னும் தலைப்பில் இரா. செல்வவடிவேல் சொற்பொழிவாற்றுவார். (க–4)

★ ★ ★

இணுவில் தெற்கு நடுவிளாத்தி ஸ்ரீ ஞானவைரவர் திருக்கோயிலில் புதிதாக பிரதிஷ்டை செய்யப்பட்ட நாகதம்பிரான் சுவாமிகளுக்கு நேற்று மகாகும்பாபிஷேகம் இடம்பெற்றது

எதிர்வரும் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவுடன் ஆலய வருடாந்த உற்சவம் நிறைவு பெறும். (க–15)

சுன்னாகம் மயிலணி ஸ்ரீ சர்வமங்கள இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பௌர்ணமி தினவிழா இடம்பெற உள்ளது.

அன்று விசேட அபிஷேகம், பூசைகள் நடைபெற்று அம்பாள் வீதியுலா இடம்பெறும். (க–152)

★ ★ ★

தெல்லிப்பழை மயிலிட்டி தெற்கு அகில இலங்கை சபரகிரி ஐயப்பசுவாமி தேவஸ்தான ஆவணி ஓணப் பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. (க–4)

★ ★ ★

மல்லாகம் புதுமை மாதா ஆலய வருடாந்த திருவிழா இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 10 தினங்களுக்கு நடைபெறும் இத்திருவிழாவின் இறுதித் திருவிழா எதிர்வரும் 9 ஆம் திகதியாகும்.

திருவிழா நாள்களில் தினமும் மாலை 5 மணிக்கு திருச்செபமாலையுடன் வழிபாடுகள் ஆரம்பமாகும். (க–15)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஓக. 31

சங்குவேலி தெற்கு பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவத்தில் இன்று வெள்ளிக்கிழமைஇடம்பெறும் சப்பறத்திருவிழாவின் போது இசை நாடக மேடைப் பாடல்கள் சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெறவுள்ளன.

கலாபூஷணம் வி. என். செல்வராஜா, நடிககலாமணி வி. செல்வரட்ணம் உட்படப் பலர் பங்கேற்கும் இந்த நிகழ்ச்சி இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும். (ஐ)

(9 ஆம் பக்கம் பார்க்க)

உதயன்

## தமிழ்க் கட்சிகளுக்கு விரிக்கப்பட்டுள்ள வலை!

ஒரே சமயத்தில் இரண்டு தோணிகளில் கால் வைக்கும் தனது போக்கினால்தான் பல தேவையற்ற சிக்கல்களை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வாங்கிக் கட்டிக்கொள்கின்றார் என்று சில தினங்களுக்கு முன்னர் இதே பத்தியில் குறிப்பிட்டிருந்தோம்.

அரசியல் நெருக்கடிகள் தமது அரசின் கழுத்துக்கு வந்த பின்னரும் கூட இந்தப் போக்கில் இருந்து அவர் மாறாதது ஆச்சரியத்துக்கு உரியது.

தனது கூட்டணி அரசில் இருந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வெளியேறியதை அடுத்து நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்த ஜனாதிபதி, அதன் பின்னர் எதிர் தரப்பில் இருந்து எம்.பிக்களை பிரித்தெடுத்துத் தனது கூட்டணிக்கு இழுக்க முயற்சித்தார்; முஸ்லிம் காங்கிரஸை உடைக்க பிரயத்தனம் செய்தார்; ஜே.வி.பியுடன் பேரம் பேசினார்; தமிழ்க் கட்சிகளை அழைத்து ஆசை வார்த்தை காட்டிப் பார்த்தார்; ஒன்றும் பலிக்காமல் இறுதியாகப் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவுடன் கூட சமரசம் செய்து பார்த்தார். எதுவும் சரிவரவில்லை. எதிர்வரும் ஏழாம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது நெருக்கடியை எதிர்கொள்வது கஷ்டம் என்பதை உணர்ந்த நிலையில் தனது கடைசி ஆயுதத்தையும் எடுத்து விட்டிருக்கின்றார் அவர்.

விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்தம் செய்து பேச்சு நடத்துவது என்ற அறிவிப்பு ஆயுதம்தான் அது.

ஒருதலைப்பட்சமாகப் புலிகள் யுத்த நிறுத்தம் செய்து, நான்கு மாதங்களுக்கு அதை நீடித்து, பேச்சுக்கு நேசக்கரம் நீட்டிய போது, அதை மமதையுடன் உதறித்தள்ளி, இராணுவத் தீர்வினை தனது நாட்டத்தில் தொடர்ந்து விடாப்பிடியாக நின்ற சந்திரிகா அரசு, இப்போது தென்னிலங்கை அரசியல் நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்க முடியாத இக்கட்டு நிலை வந்துள்ளபோது, திடீரென 'பல்டி' அடித்துத் தனது அரசியல் சூதாட்டத்தில் பகடைக்காயாக புலிகளுடனான சமரசப் பேச்சு என்ற திட்டத்தை முன்னகர்த்துகின்றது.

இப்படிப் புலிகளுடன் யுத்தநிறுத்தம், பேச்சு என்று கதை விட்டால், அதனை விடாது வற்புறுத்தி வரும் ரெலோ, தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் போன்ற கட்சிகளின் எம்.பிக்கள், எதிர்த்தரப்புக் கூட்டணியில் இருந்து விலகி, தனது அரசுக்கு எதிரான நிலைப்பாட்டிலிருந்து ஒதுங்கி விடுவார்கள்; தமது அரசு நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் தப்பிப் பிழைத்து விடும் என்று கணக்குப் போடுகின்றார் ஜனாதிபதி சந்திரிகா.

அவரின் இந்தக் கயிற்றை தமிழ்க் கட்சிகள் விழுங்கிவிடக்கூடாது. கடந்த ஏழு ஆண்டுகளாகத் தமிழருக்கு ஆசைவார்த்தை காட்டி ஏமாற்றிய சந்திரிகா அரசின் மற்றொரு நாடகமாகவும் இது இருக்கலாம் என்பதைத் தமிழ்க் கட்சிகள் ஒதுக்கித் தள்ளிவிடக்கூடாது.

இப்போது நாடாளுமன்ற நெருக்கடிகளைச் சமாளிப்பதற்காக பேச்சு, யுத்தநிறுத்தம் என்று கயிறு விட்டுவிட்டுப் பின்னர் தமது தேவைகள் எல்லாம் பூர்த்தியானதும் பேச்சு என்ற பேச்சையே அடியோடு மறந்து விடுவார் சந்திரிகா அம்மையார் என்பதை - அவரது கடந்த கால அரசியலை நன்கு புரிந்துகொண்டுள்ள - தமிழ்க் கட்சிகள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

புலிகள் மீதான தடை நீக்கம், யுத்த நிறுத்தம், நேரடிப் பேச்சு இவற்றுக்கான கால அட்டவணை குறிக்கப்பட்டு, அவை நடைமுறையில் செயற்படுத்தப்பட்டு, செயல் வடிவம் எடுக்கும் வரை அரசின் வெறும் அறிவிப்புகளை நம்பித் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் ஏமாந்து போகக் கூடாது.

அடுத்த ஒருவருட காலத்துக்கு புலிகளுடன் பேச்சோ, அதிகாரப் பகிர்வோ, அரசமைப்பு மாற்றமோ செய்யக்கூடாது என்ற நிபந்தனையுடன் ஒருவருட காலத்துக்கு 'தகுதிகாண் அரசு' ஒன்றை அமைப்பதற்கு ஆதரவு வழங்க முன்வந்திருக்கும் ஜே.வி.பியை ஒருபுறம் பேச்சுக்கு அழைத்துக் கொண்டு -

மறுபுறம் புலிகளுடன் யுத்தநிறுத்தம், பேச்சு என்ற அறிவிப்பை விடுக்கின்றது சந்திரிகா அரசு.

இவ்வாறு, இப்போதும் கூட இரட்டைத் தோணியில் கால் வைக்கும் அரசு தனது அறிவிப்பில் நேர்மையாக இருக்கும் என்று நம்புவது எப்படி?

## யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு தனியான இணையத்தளப் பக்கம்

யாழ்ப்பாணம்,ஓக.31

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரிக்கு என சர்வதேச இணைய வலைப் பின்னலில் 'வெப் தளம்' ஒன்று திறக்கப்பட்டுள்ளது.

யாழ்.இந்து மகளிர் கல்லூரியுடன் சம்பந்தப்பட்டோர் உலகில் எந்த மூலையில் இருந்தும் www.jhlc.lk என்ற இணையத்தள முகவரி ஊடாக கல்லூரியுடன் தொடர்புகொள்வதோடு கல்லூரி நடவடிக்கைகள் குறித்தும் அறிந்து கொள்ள முடியும் என்று, இந்த இணையத்தளப் பக்கத்தை ஸ்தாபிப்பதற்கு விடாமுயற்சியுடன் ஈடுபட்டு வந்த கல்லூரியின் பழைய மாணவிகள் சங்கக் கொழும்புக் கிளை அறிவித்துள்ளது.

உலகளாவிய ரீதியில் பல்வேறு துறைகளிலும் சிறந்து விளங்கும் கல்லூரியின் பழைய மாணவிகளுக்கும், நலன்விரும்பிகளுக்கும் கல்லூரி தொடர்பான விடயங்களை அவ்வப்போது தெரியப்படுத்துவதற்கும், அவர்களின் கருத்துக்கள், உதவிகள் போன்றவற்றைத் துரிதமாகப் பெற்று இக்கல்லூரி வளர்ச்சிக்கு மேலும் உதவுவதற்கும் இந்த இணையத்தளம் ஓர் அடித்தளமாக அமையும் என்றும் பழைய மாணவிகள் சங்கக் கொழும்புக் கிளை தெரிவித்துள்ளது. (உ-ஐ)

## பௌர்ணமி தின கலை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம்,ஓக.31

வலி.தெற்கு பிரதேச செயலர் பிரிவில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள கலாசார பேரவையரின் ஏற்பாட்டில் எதிர்வரும் காலங்களில் வரும் பௌர்ணமி தினங்களில் கலை நிகழ்ச்சிகளை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாதாந்தம் நடைபெறவுள்ள இந்த பௌர்ணமி தின கலைநிகழ்ச்சிகளின் முதலாவது நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். தொடர்ந்து கலை நிகழ்வுகளும் மேடையேற்றப்படவுள்ளதாக கலாசார பேரவையின் தலைவர் தெரிவித்தார். (க-6)

## பரீட்சை முடிவுகள்

வட இலங்கை சங்கீத சபையினால் இவ்வாண்டு நடத்தப்பட்ட பரீட்சை முடிவுகள் பரீட்சார்த்திகளுக்கு தபால் மூலம் அனுப்பப்பட்டு வருகின்றன.

10ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் இப்பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (க-86)

## வல்லை ஆஸ்பத்திரியின் தாதியருக்கு விடுதி அமைப்பு

நெல்லியடி,ஓக.31

வல்வெட்டித்துறை மாவட்ட மருத்துவமனையில் பணிபுரியும் தாதிய உத்தியோகத்தர்களின் நலன் கருதி மூன்று அறைகளைக் கொண்ட விடுதிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதற்கென 15லட்சம் ரூபாவை சுகாதார அமைச்சு வழங்கியுள்ளது.

இதேவேளை-

இந்த மருத்துவமனையில் பணிபுரியும் சிற்றூழியர்களை மேற்பார்வை செய்வதற்கு அங்கு நிரந்தர மேற்பார்வையாளர் இன்மையால், ஆண் பரிசாரர்களே இப்பதவியை மேற்கொண்டு வருகின்றார்கள்.

இங்கு மேற்பார்வையாளராகப் பணிபுரிந்து வந்தவர் ஒருவர் கடந்த ஜனவரி மாதம் ஓய்வுபெற்றதையடுத்து புதிதாக அப்பதவிக்கு எவரும் நியமனம் செய்யப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (க-109)

## 'ஆத்மஜோதி' ஞாபகார்த்த விழா

யாழ்ப்பாணம்,ஓக.31

யாழ்.இந்துசமயப் பேரவையின் முன்னாள் தலைவரும், சமயப்பெரியாருமாகிய ஆத்மஜோதி நா.முத்தையாவின் ஞாபகார்த்தவிழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஏழாலை மேற்கில் உள்ள கைதடி சைவச்சிறுவர் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந்து சமயப் பேரவையின் உப தலைவர் இ.குமாரசுவாமி தலைமையில் நடைபெறும். இந்த விழாவில் ஆத்மஜோதியின் ஞாபகார்த்தவுரையை யாழ்.பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் நிகழ்த்துவார்.

தொடர்ந்து யாழ்.பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் மு.நவரத்தினத்தின் இசைக் கச்சேரி இடம் பெறும்.

சைவச் சிறுவர் சிறுகுடிலும் அன்றையதினம் திறந்து வைக்கப்படும். (க-7)

## 'ஒசுசல' மருந்து விற்பனை நிலையம் விரைவில் யாழ்நகரில் திறக்கப்படும்

அரியாலை,ஓக.31

அரச மருந்துக் கூட்டுத்தாபனத்தின் 'ஒசுசல' ஏக விநியோகஸ்தராக நியமனம் பெற்றிருக்கும் யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் யாழ்நகரில் விரைவில் மருந்து விற்பனைக் கிளை ஒன்றைத் திறக்கவுள்ளது.

கே.கே.எஸ். வீதியில் அமைந்திருக்கும் யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைக் காரியாலய கீழ்மாடிக்கட்டத்தில் இந்த விற்பனைக் கிளையை திறந்து வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மக்கள் இந்த நிலையத்தில் கொழும்பு விலைக்கு மருந்துகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று பலநோக்குக் கூட்டுறவுச்சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (க-17)

### நாளை

ஆவணி 16
சனிக்கிழமை
திதி: சதுர்த்தசி
பின்னிரவு 1.12 வரை.
நட்சத்திரம் : அவிட்டம்
முழுவதும்
சுபநேரம் : 3.05 - 4.35
ராகுகாலம் : 9.05 - 10.35
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

செயலில் சிறிதளவாவது செய்ய முயற்சிசெய். இயலாவிடில் பேச்சை யாவது குறைத்துக்கொள். அதுவும் இல்லாவிடில் உன்னால் எதுவும் செய்யமுடியாது.

## நாட்டு நடப்பு

### இனியது

*இனியது கேட்கின் இன்முக கணபதி*
*இனிது இனிது தமிழ் மொழி இனிது*
*அதனிலும் இனிது அது தரு பொக்கிஷம்*
*பொக்கிஷம் எது என புகன்றிடவேண்டில்*
*கம்பன் வள்ளுவன் கண்ணகி காப்பியம்*
*பண்டைய இலக்கியம் பழம் தமிழ் பாடல்கள்*
*பக்தி சொட்டும் பற்பல புராணங்கள்*
*பண்ணிசை ததும்பும் தேவார பதிகங்கள்*
*அனைத்தையும் கற்ற நல் அறிஞர்கள் செப்ப*
*அமர்ந்திருந்து ஆர்வமாய் பருகுதல் தானே!*

*- விகடகவி.*

## குடாநாட்டில் 'எய்ட்ஸ்' அச்சுறுத்தல்: வாடிக்கையாளர்களுக்கு தனித்தனி 'பிளேட்'கள் பயன்படுத்த முடிவு

### சிகையலங்கரிப்பாளர்கள் சம்மதம்

வலி.தெற்கு,ஓக.31

வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் இயங்கிவரும் சிகையலங்கரிப்பாளர்கள் தமது வாடிக்கையாளர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனி சவர அலகுகளை (பிளேட்) பயன்படுத்த சம்மதம் தெரிவித்துள்ளனர்.

குடாநாட்டில் 'எய்ட்ஸ்' நோய் பரவிவருவதாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரிகள் உடனடிப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் இயங்கிவரும் சகல சிகையலங்கரிப்பு நிலையங்களின் உரிமையாளர்களை அழைத்து சுகாதார ஒழுங்கு விதிகள் பற்றிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலில் இப்பகுதிகளைச் சேர்ந்த சிகை அலங்கரிப்பாளர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பலர் கலந்துகொண்டனர்.

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அலுவலகப் பொறுப்பதிகாரி ரி.மகாதேவன் தலைமையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலின்போது பல விடயங்கள் ஆராயப்பட்டு அவற்றைக் கடைப்பிடிப்பதற்கான சம்மதத்தையும் சிகையலங்கரிப்பு நிலைய உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

ஒவ்வொருவருக்கும் தனித்தனியான சவர அலகுகள் பயன்படுத்தப்படும்.

★ ஒவ்வொருவருக்கும் தனித்தனித் துவாய்கள் பாவிக்கப்படுவதுடன் நாளாந்தப் பாவிப்புக்கென சுத்தமான பத்து துவாய்களைக் கைவசம் வைத்திருப்பது.

★ தொற்று நீக்கிய சவர உபகரணங்களைப் பயன்படுத்துவது.

★ துப்புரவான சீப்புகள் பயன்படுத்தப்படும்.

மேற்கூறிய தீர்மானங்களை சிகையலங்கரிப்பாளர்கள் தவறாது பின்பற்ற வேண்டும் எனவும் -

இவற்றைப் பின்பற்றத் தவறும் சிகையலங்கரிப்பாளர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் வைத்திய பொறுப்பதிகாரி ரி.மகாதேவன் வலியுறுத்திக் கூறியுள்ளார். (க-152)

## வடமராட்சி கிழக்கில் இன்று முதல் 'மலேரியாத் தடுப்பு வாரம்'

வடமராட்சிகிழக்கு,ஓக.31

வடமராட்சி கிழக்கில் மலேரியா நோய் தீவரமாகப் பரவி வருவதை அடுத்து, இன்று முதல் அப்பகுதியில் 'மலேரியாத் தடுப்பு வாரம்' அனுஷ்டிக்கப்படவுள்ளது.

மலேரியாத் தடுப்பு வாரம் அனுஷ்டிப்பது சம்பந்தமான முடிவு கடந்த செவ்வாய்க்கிழமை மருதங்கேணி உதவி அரச அதிபர் வி.ப. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக எடுக்கப்பட்டது.

இவ்வாரம் தொடர்பாக இன்று வெள்ளிக்கிழமை மலேரியா தீவிரமாகப் பரவிவரும் குடத்தனை ஆறாம் கட்டைப் பகுதியில் நுளம்புக் குடம்பிகள் உற்பத்தியாகும் நீர் தேங்கி நிற்கக்கூடிய தாழ்வான பகுதிகளை மண் போட்டு நிரப்பும் நடவடிக்கைகளும் பாவனைக்குப் பயன்படுத்தப்படும் நீர்நிலைகளுக்கு 'அபேற்' எனப்படும் கிருமிநாசனிகள் தெளித்தலும் பாவனைக்குப் பயன்படுத்தப்படாத நீர் நிலைகளுக்கு கழிவு ஒயில் ஊற்றும் நடவடிக்கைகளும் இந்த வாரத்தில் இடம்பெறவுள்ளன.

இந்த நடவடிக்கையில் மலேரியாத் தடை இயக்கத்தினரும், அபிவிருத்தித் தொண்டர்களும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க மருதங்கேணி கிளைத் தொண்டர்களும், மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவு பணிமனையின் அனுசரணையுடன் ஈடுபடவுள்ளனர். (க-182)


கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



காலைத் துண்டாட காத்திருக்கும் மிதிவெடி
அது இருக்குமிடங்களில் வையாதே காலடி
இது தெரிந்தும் நீ அங்கு வைத்தால் ஓரடி
காலை இழந்து தஞ்சமடைவாய் ஊன்றுதடி!



நல்லூர் உற்சவ காலத்தில் மக்கள் வங்கியால் அமைக்கப்பட்ட விசேட கருமபீடத்தில் ஜயஸ்ரீ பரிசில் பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் வைபவம் அண்மையில் நடைபெற்றது.

பரிசில் வென்றோருக்கு மக்கள் வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் சி.இளம்பிறைநாதன் பரிசில் வழங்குகிறார். பிரதேச முகாமையாளர் சு.சிவபாதம், கன்னாதிட்டிக் கிளை முகாமையாளர் திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் ஆகியோர் உட்பட வங்கிப் பணியாளர்களையும் படத்தில் காணலாம். (ஐ)



கடந்த வருடம் இலங்கை வங்கியால் நடத்தப்பட்ட 'ரண் கினும் வாசனா' சீட்டிழுப்பில் பரிசுபெற்ற இலங்கை வங்கியின் யாழ்.மேற்றரக் கிளை வாடிக்கையாளர் ஒருவருக்கு இலங்கை வங்கியின் யாழ். மாவட்ட முகாமையாளர் சி.விக்கினராஜா பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.


அண்மையில் நல்லூர் மஹோற்சவத்தையொட்டி அமைக்கப்பட்ட விசேட கருமபீடத்தில் இந்தப் பரிசளிப்பு இடம்பெற்றது. (ஐ-6)


NIPPON GAS COOKER

வேறு எந்த தயாரிப்புடனும்

ஒப்பிட்டுப் பாருங்கள்

1. நிறை
2. Stainless Steel இன் தடிப்பு
3. தன்னியக்க பற்றவைக்கும் கருவியின் தரம்



இலகுவில் கட்டுப் படுத்தக்கூடியதன்னியக்க பற்றவைக்கும் கருவி கொண்ட

நிப்பொன் காஸ் குக்கர்கள்

மூலம் காஸை சேமியுங்கள்

LANKA NIPPON

No.18, Keyzer St, Colombo-11.Tel:437735.
No.10, Trelawny Place, (Behind Milk Bar), BambalapitiyaJunc,Colombo-04.Tel:589992.

AVAILABLE ISLAND WIDE

நிப்பொன் உத்தரவாதமுள்ள தயாரிப்புக்கள்



யாழ்.பிராந்திய மக்கள் வங்கி விளையாட்டுக் கழகம்

அறிவித்தல்

மாபெரும் சைக்கிளோட்ட, மரதன் ஓட்டப் போட்டிகள் பற்றிய விவரம்

சைக்கிளோட்டம் பெண்கள்

காலம்:- 02.09.2001 ஞாயிற்றுக்கிழமை.
நேரம்:- காலை 7.00 மணி (இ.நே).
இடம்:- சுன்னாகம் பஸ்நிலையம்.

மரதன் ஓட்டம்

காலம்:- 02.09.2001 ஞாயிற்றுக்கிழமை.
நேரம்:- காலை 6.30 மணி (இ.நே).
இடம்:- திருநெல்வேலி சந்தி.

போட்டியாளர்கள் இந்த அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

செயலாளர்,
யாழ்.பிராந்திய மக்கள் வங்கி,
விளையாட்டுக் கழகம்.

(C/18052)


## அபராதம்

வலி.வடக்கு,ஒக.31

சட்டவிரோதமான முறையில் 20 போத்தல் கசிப்பு வைத்திருந்த குற்றத்தை ஒப்புக் கொண்ட நபருக்கு 15ஆயிரம் ரூபா அபராதமும், ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்தும்படி மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி பா.சுப்பிரமணியம் உத்தரவிட்டார்.

பண்டத்தரிப்பு அம்மன் வீதியைச் சேர்ந்த ஞானமுத்து வேதநாயகம் என்பவருக்கே இத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (க-86)

## கோப்பாய்ச் சந்தையில் ஒரு கிலோ அரிசி ஐந்து ரூபா!

சாவகச்சேரி,ஒக.31

கோப்பாய் பொதுச் சந்தையில் பழுதடைந்த அரிசி விற்பனை செய்யப்படுகிறது. பெருமளவு அரிசி மூடை மூடையாகத் தச்சன்தோப்பு, நாவற்குழிப் பகுதிகளில் இருந்து பொதுமக்களால் எடுத்து வரப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

மிகவும் பழுதடைந்து காணப்படும இந்த அரிசியை கால் நடைகளுக்கு பொதுமக்கள் வாங்கிச் செல்கின்றனர்.

ஒரு கிலோ அரிசி 5 ரூபாவாக விற்கப்படுகிறது. (க-31)

## திருத்த வேலை

குருநகர்.ஒக.31

குருநகர் புனித யாகப்பர் ஆலய திருத்த வேலைகள் தற்போது நடைபெற்றுவருகின்றன.

இந்த ஆலயம் விமானக் குண்டு வீச்சினால் தரைமட்டமாகியது தெரிந்ததே. (ஐ-51)

## தனிநாயகம் அடிகளாரின் நினைவுதினம்

குருநகர்,ஒக.31

தரணியெல்லாம் தமிழ் வளர்த்த பேரறிஞர் தனிநாயகம் அடிகளாரின் இருபத்தோராவது நினைவுதினம் நாளை ஆகும்.

இதனையொட்டி இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நன்றித்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இந்நிகழ்வை கத்தோலிக்க இலக்கிய வட்டம் ஒழுங்கு செய்துள்ளது. (ஐ-51)

## புலோலியில் திருட்டு

நெல்லியடி,ஒக.31

வீட்டின் ஜன்னலை உடைத்துக் கொண்டு, உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்து பெறுமதியான உடுபுடவைகள், 'ரேப் ரெக்கோடர்' என்பனவற்றை திருடிக்கொண்டு தலைமறைவானார்கள்.

இச் சம்பவம், கடந்தவாரம் புலோலி கிழக்கு சந்தா தோட்டம் என்ற இடத்தில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக பருத்தித்துறை பொலீஸ் நிலையத்தில் புகாரிடப்பட்டுள்ளது. (க-109)

## பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம்,ஒக.31

வடமராட்சி லயன்ஸ் கழகம் இலங்கை நிர்வாகசபை பரீட்சைக்கான இலவச பயிற்சி வகுப்புக்களை எதிர்வரும் 2ஆம், 4ஆம் திகதிகளில் பிற்பகல் 3 மணிக்கு புலோலி மெ.மி.த. பாடசாலையில் நடத்தவுள்ளது. (க-4)

# காதலனைத் தேடிச்சென்ற பெண் வாவியிலிருந்து சடலமாக மீட்பு

## வாழைச்சேனையில் சம்பவம்

மட்டக்களப்பு,ஒக.31

காதலித்து கர்ப்பவதியாக்கிவிட்டு திருமணம் செய்யமறுத்த காதலனைத் தேடிச்சென்ற மூன்று மாதக் கர்ப்பிணியான காதலி, காதலனின் வீட்டுக்குப் பின்னால் உள்ள வாவி ஒன்றின் அருகில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாயன்று வாழைச்சேனையில் இடம்பெற்றுள்ளது.

கல்குடாவைச் சேர்ந்த பூபாலபிள்ளை கீதா என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இவர் தனது காதலனான லோகராஜன் சுந்தரராஜன் (வயது 28) என்பவரைத்தேடி கடந்த திங்களன்று அவரது வீட்டுக்குச் சென்றிருந்தார் என்றும் -

பின்னர் மறுநாள் காலை வாவி ஒன்றின் அருகில் இருந்து இவரது சடலம் மீட்கப்பட்டதாகவும் -

பொலீஸார் தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட காதலனை பொலீஸார் கைது செய்துள்ளனர்.

உயிரிழந்த பெண்ணின் மரண விசாரணையை நடத்திய திருகோணமலை மாவட்ட நீதிவான் இவரது மரணம் தற்கொலையா? கொலையா? என்ற சந்தேகம் இருப்பதால் அவரது கர்ப்பப்பையில் இருந்து எடுக்கப்பட்ட கரு, இரத்தம், ஈரல், மூளை, சிறுநீரகம் என்பனவற்றை இரசாயனப் பகுப்பாய்வுக்காகக் கொழும்புக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டார். (ம)

## சாயி சமித்தியில் ஆன்மீக நிகழ்ச்சி

யாழ்ப்பாணம்,ஒக.31

யாழ்பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணி முதல் போயா ஆன்மீக நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

காயத்திரி மந்திர ஜெபம், இலட்ச அர்ச்சனை, பண்ணிசை, பஜனை, சொற்பொழிவு என்பன இடம்பெறும். நண்பகல் நாராயண சேவையும் நடைபெறும். (ஐ)

## 31 ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு 23 . 06 . 1931



உதிர்வு 01 . 08 . 2001

### திருமதி கமலாவதி வாமதேவன்

*பாசத்துடன் வழிகாட்டிய எம் கலங்கரை விளக்கே – இன்று*
*அலைகடல் நடுவே படகுகளாய் தத்தளிக்கின்றோம் நாம்*
*எம் இதயங்களில் நிழலாடும் எம் அன்பு வழிகாட்டியே – உன்*
*ஆத்ம சாந்திக்காய் அர்ச்சிக்கின்றோம் இறைவனை.*

இன்று (31-08-2001) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய ஆத்மசாந்தி நிகழ்விலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*Y.M.H.A. அருகில்,*
*ஆடியபாதம் வீதி,*
*திருநெல்வேலி.*

மகள், மருமகன்,
உறவினர்கள்.

(91744)


போட்டிப் பரீட்சை பயிற்சி வகுப்புகள்

(i) எழுதுவினைஞர்: பொதுவிவேகம், மொழி அறிவு
(ii) கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தருக்குரியது: பொது விவேகம், பொது அறிவு.


ஆரம்பம்: 01-09-2001 சனி நேரம் 1 மணி

ஆசிரியர்: அ.குமாரவேல்

புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம்,
யாழ்ப்பாணம்.

(91689)


## கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய தேர்த்திருவிழா



முக்கிய குறிப்பு:

ஆலய மேற்கு வீதியில் அமைந்துள்ள அருணகிரிநாதர் மடத்தில் மாகேஸ்வர பூசை (விசேட அன்னதானம்) நடைபெறவுள்ளதால் முருகன் அடியவர்கள் அனைவரையும் அன்னதானத்திலும் பங்குபற்றிச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.



முருகன் அடியார்களே!

நாளை (01-09-2001) சனிக்கிழமை காலை 9.00 மணியளவில்

1939ஆம் ஆண்டு பாரதநாட்டின் தலைசிறந்த சிற்பாசாரியார்கள் மூலமாக

**திரு.ச.வே.சண்முகம்பிள்ளை** அவர்களால் சிறந்த முறையில் உருவாக்கப்பட்ட இலங்கையில் பிரசித்தமான தேர்களில் ஒன்றான

அழகிய சித்திரத்தேரில்

நமது அல்லல் தீர்த்தருளும் ஆறுமுகப் பெருமான் வள்ளி தேவயானை சமேதராக ஆரோகணித்துத் திருவீதிவலம் வரும் காட்சி இடம்பெறத் திருவருள் கை கூடியுள்ளது.

கோலாகலமான இக்காட்சியைக் கண்டுகளித்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யுமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

திரு.ச.வே.சண்முகம்பிள்ளை குடும்பத்தினர்.
- தேர்த்திருவிழா உபயகாரர். (91646)

# அரசியல்வாதிகளுக்குத் தான் யுத்தம் தேவைப்படுகின்றது!

**இராணுவ நடவடிக்கையின் போது காணாமற்போன படையினரின் உறவினர்களின் அமைப்பினர் அந்தப் படையினரின் விடுதலை வேண்டி மடுத் திருப்பதிக்கு அண்மையில் தல யாத்திரை மேற்கொண்டனர். அப்போது எதிர்பாராத விதமாக விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர் சு.ப.தமிழ்ச்செல்வனை அவர்கள் சந்தித்தனர்.**

**அந்த அமைப்பினரின் மடுத் திருப்பதிக்கான விஜயம் மற்றும அவர்களின் அனுபவங்களின் தொகுப்பு இது. 26.08.2001 திகதிய 'லங்காதீப' பத்திரிகை இதனை வெளியிட்டுள்ளது. அதன் தமிழாக்கத்தை இங்கு தருகின்றோம்.**

மருதமடு மாதாவின் தேவாலயம விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தில் அடர்ந்த காட்டுப் பகுதியின் மத்தியிலுள்ள மடுத் திருப்பதியில் அமைந்துள்ளது. சில மாதங்களுக்கு முன்னர் தாய் நாட்டில் சமாதானம் வேண்டி, மடுமாதாவின் சொரூபம் நாடெங்கும் தெய்வீக யாத்திரையாகக் கொண்டு செல்லப்பட்டது. இருப்பினும் துரதிஷ்டவசமாக மடுமாதாவுக்குத் தேவைப்பட்ட சமாதானம் இந்நாட்டு அரசியல வாதிகளுக்கு தேவையற்ற ஒன்றானது. பிரதிவாதிகளான விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டபோது நாங்கள் (சிங்களவர்கள்) யுத்தத்தைத் தொடர்ந்தோம். இறுதியில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் சுமார் 20 பேர்வரை வந்து கட்டுநாயக்கா விமானநிலையத்தின்மீது தாக்குதலை மேற்கொண்டு முழுநாட்டையுமே கலக்கிவிட்டனர். இருப்பினும் நாங்கள் இன்னும் திருந்தவில்லை.

யுத்தத்தின் பலாபலன் அழிவேயாகும். அந்த அழிவிற்கு சொத்துக்கள் மாத்திரமன்றி மனித உயிர்களுமே இரையாகின்றன. ஒரு சிலர் சில வேளைகளில் மரணத்தின் பிடியிலிருந்து தப்பி, கைது செய்யப்பட்டு சிறை வாழ்க்கையை அனுபவிக்கின்றனர். இவ்வாறான தலைவிதிக்கு விடுதலைப் புலிஉறுப்பினர்கள் மாத்திரமன்றிப் பாதுகாப்புப் படைகளைச சேர்ந்தவர்களும் உட்படுகிறார்கள். காலத்திற்குக் காலம் இருவர் அல்லது மூவர் விடுதலை செய்யப்படுகின்றனர். இருப்பினும் பெரும் எண்ணிக்கையிலான படைவீரர்கள் இன்னும் புலிகளின் பாதுகாப்பில் உள்ளனர்.

இவ்வாறு காணாமற்போன படைவீரர்கள் குறித்து நாட்டில் எவருக்கும் பொறுப்பில்லை. அவர்கள் பற்றி அவர்களின் பெற்றோர்கள், சகோதர சகோதரிகள், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோர் மட்டுமே கவலைப் படுகிறார்கள். இவ்வாறு காணாமற்போன படையினரின் உறவினர்கள் ஒன்றிணைந்து காணாமற்போன படைவீரர்களின் உறவினர்களின் அமைப்பு என்ற பெயரில் அமைப்பு ஒன்றை அமைத்துள்ளனர்.

களனியில் பட்டியசந்தியில் அமைக்கப்பட்டுள்ள இந்த அமைப்பில் ஆயிரத்திற்கும் அதிகமான உறுப்பினர்கள் உள்ளனர். ஏனைய அமைப்புகளின் செயற்பாடுகள்போல் இந்த அமைப்பின் செயற்பாடுகள் அந்தக் கட்டடத்திற்குள் மட்டுப்படுத்தப்படவில்லை.

இந்த அமைப்பின் உறுப்பினர்கள் புலிகளின் பாதுகாப்பிலுள்ள - துன்பங்களை அனுபவித்து வரும் தமது உறவினர்களை - மீட்பதற்குப் பல வழிகளிலும் முனைந்து வருகின்றனர்.

மனிதனால் நிறைவேற்ற முடியாத செயல் ஏதாவது இருப்பின் அதை நிறைவேற்றித் தருமாறு கடவுளிடம், புத்தபிரானிடம், மடுமாதாவிடம் வேண்டுவது எமது வழக்கம். எனவே இந்த உறவினர் அமைப்பின் பிரதிநிதிகள் கடந்த 13ஆம் திகதி புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலுள்ள மடுத் தேவாலயத்திற்குத் தலயாத்திரை சென்றனர். காணாமற்போன உறவினர்களுக்குத் துன்பங்கள், தொல்லைகள ஏற்படக்கூடாது, அவர்களுக்கு விடுதலை கிடைக்கவேண்டும் எனப் பிரார்த்திப்பதற்கு மடுத் தேவாலயத்திற்கு தலயாத்திரை செய்வதே அவர்களின் நோக்கமாகும்.

பல நாள்கள் முயற்சியின் பின்னர் மடுத்தேவாலயப் பகுதிக்குச் செல்வதற்கான அனுமதியைப் பாதுகாப்பு அமைச்சிடமிருந்து பெற்று, அங்கு சென்ற பிரதிநிதிகள் குழுவில் காணாமற்போன படைவீரர் அமைப்பின் தலைவர் ஏ.ஜி.நாணயக்காரா, செயலாளர் எஸ்.வெத்தசிங்க மற்றும் இந்திராணி தாபரே, மாக்கிறெட் நாணயக்காரா, சாந்தனி சமரவீர, எஸ்.கே.தியேஷ், குமார குணரத்ன, பராக்கிரம அபேரத்ன ஆகியோர் அடங்கியிருந்தனர்.

இந்தக் குழுவினர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள மடுத் தேவாலயத்திற்கே முதலில் சென்றனர்.

இம்முறை ஒரு லட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் மடுத்தேவாலயத்திற்கு வந்திருந்தனர். சிங்களவர்கள், தமிழர்கள் மிகவும் அமைதியாகவும் அன்புடனும் காணப்பட்டனர். விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் சிங்களவர்கள், தமிழர்கள் என்ற பேதமின்றி அனைவருக்கும் பாதுகாப்பை வழங்கினர்.

மடுத்தேவாலயத்திற்குச் சென்று அங்கிருந்த ஒழுங்குகளை அவதானித்த காணாமற்போன படைவீரர்கள் அமைப்பின் தலைவர் நாணயக்காரா பின்வருமாறு தெரிவித்தார்:-

"எங்கள் அரசியல்வாதிகளுக்கும், எங்கள் படைகளுக்கும்தான் யுத்தம் தேவைப்படுகிறது".

மடுத்தேவாலயத்தில் கூடியிருந்த

## மடு சென்று திரும்பியவர் இப்படிக் கூறுகின்றார்

லட்சத்திற்கும் அதிகமான பக்தர்களுடன் காணாமறபோன தமது உறவினர்களுக்காக இக்குழுவினர் பிரார்த்தனையில் ஈடுபட்டனர். மனமுருகி நாங்கள் மேற்கொண்ட பிரார்த்தனையை அவதானித்த விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் எமது துன்பங்களைப் புரிந்து கொண்டனர் போலும். பின்னர் அவர்கள் எம்மிடம் வந்து என்ன பிரச்சினை எனக் கேட்டனர். எமது பிள்ளைகள் காணாமற்போய்விட்டனர் என நாம் தெரிவித்தோம்.

"அரை மணித்தியாலம் காத்திருங்கள்" என புலி உறுப்பினர்கள் கட்டளையிட்டனர்.

தங்கள் பிள்ளைகளை மீட்டுச் செல்ல அந்தக் குழுவினர் மடுவுக்கு வரவில்லை. ஆகக் குறைந்தது அவர்களது சுக துக்கங்களைக் கண்டறியவும், அவர்களது விடுதலைக்காகப் பிரார்த்திக்கவுமே அவர்கள் மடு வந்திருந்தனர். இவ்வாறு வந்த அந்தக் குழுவினருக்கு விடுதலைப் புலிகளின உறுப்பினர்களின் கரிசனை எதிர்பாராத ஒரு சம்பவமாக அமைந்தது. கணத்திற்குக்கணம் புதுமையுடனும் மகிழ்ச்சியுடனும் அந்த அரை மணித்தியாலத்தைக் கழித்தனர். மடுத்தேவாலயத்தை அண்டிய பகுதிகளில் சிறு கூடாரங்களை அமைத்து, மடு மாதாவின் ஆசியை வேண்டிக்கொண்டிருந்த ஆயிரக்கணக்கான பக்தர்களையும் அவர்களது தேவைகளைக் கவனித்துக் கொண்டிருந்த புலி உறுப்பினர்களையும் பார்த்தவாறு ஆவலுடன் காத்திருந்தனர். புலிகள் எதிரிகள் என அவர்களின் மனதில் ஆழப் பதிந்திருந்த எண்ணம் படிப்படியாக அகலத் தொடங்கி, சமாதானம் தொடர்பான புதிய எதிர்பார்ப்புகள் உருவாக ஆரம்பித்தன.

"நீங்கள் ஏதாவது அமைப்பைச் சேர்ந்தவர்களா? எனப் புலி உறுப்பினர்கள் குழுவினரிடம் வந்து கேட்டனர்.

"ஆம், நாங்கள் காணாமற்போன படைவீரர்களின் உறவினர்களின் அமைப்பினர்."

"கொஞ்சம் இருங்கள்" எனக் கூறி புலி உறுப்பினர் மீண்டும சென்றார்.

"நாங்கள் எமது தலைவரிடம் உங்களைப் பற்றித் தெரிவித்துள்ளோம். அவர் எமது அமைப்பின் அரசியல் பிரிவுத் தலைவர், தமிழ்ச்செல்வனிடம் உங்களைச் சந்தித்துக் கலந்துரையாடுமாறு தெரிவித்துள்ளார். இதற்காக நாளை தனக்கு இருந்த வேலைகளை எல்லாம் ரத்துச் செய்துவிட்டு, உங்களைச் சந்தித்து உரையாட தமிழ்ச்செல்வன் காத்திருப்பார்" எனப் புலி உறுப்பினர்கள் வந்து தெளிவான சிங்களத்தில் எம்மிடம் தெரிவித்தனர்.

"எங்கே சந்திப்பது?"

விடுதலைப் புலிகளின் தலைமையகத்தில். நாளை காலை உங்களுக்குப் பிரயாண வசதிகளைச் செய்துதர முடியும். விருப்பமானால் கூறுங்கள்.

"எங்களுக்கு விருப்பம்" என ஒரே குரலில் கூறினோம்.

"பயமில்லையா, முன்பின் தெரியாத இடத்திற்குப் போய் அங்கு புலிகளிடம் கைதிகளாக மாட்டுப்படமாட்டோமா?" என நாங்கள் தலைவர் நாணயக்காராவிடம் கேட்டோம்.

"அது கடைசிவரை நடைபெறாது" என அவர் கூறினார்.

எமக்குக் கிடைத்த அந்த வாய்ப்பைப் பயன்படுத்துவது என முடிவு செய்தோம். மடு மாதா மீது மாத்திரம நம்பிக்கை வைத்து அந்தப் பயணத்தை மேற்கொள்வது எனத் தீர்மானித்தோம்.

### காட்டுக்குள் பயணம்

கடந்த மாதம் 14ஆம் திகதி பயணம் தீர்மானிக்கப்பட்டது. அன்று காலை 10மணிக்கு பயணம் ஆரம்பித்தது. புலி உறுப்பினர்கள் வாகனத்துடன் தயாராகி எமக்காகக் காத்து நின்றனர். காணாமற்போன படைவீரர்களின் உறவினர்கள் காணாமற்போன தமது உறவினர்களை நேரில் காணும் எண்ணத்தை மனங்களில் பதித்தவாறு வாகனத்தில் ஏறினர்.

மிகவும் மோசமான வீதிவழியாக வாகனம் ஊர்ந்தவாறே சென்றுகொண்டிருந்தது. ஒரு பள்ளத்தில் ஒரு சில்லு வீழ்ந்தபோது மற்றொரு பள்ளத்தில் இன்னொரு சில்லு வீழ்ந்தது. வாகனம் மாட்டுவண்டி செல்வதுபோல் சென்று கொண்டிருந்தது. வீதியின் இரு மருங்கிலும் அடர்ந்த காடுகள். மரங்களில் மரக் கண்ணிகளும் நிலத்தில் நிலக் கண்ணிகளும் பொருத்தப்பட்டிருந்தன.

'இந்தக் கண்ணி வெடிகளை வெடிக்கச்செய்து எங்களைக் கொல்லவா கூட்டிச் செல்கிறார்கள்? இந்தக் கண்ணி வெடிகள் தற்செயலாக வெடிக்குமா?' என்ற எண்ணங்கள் தோன்றின. ஆனால் சொல் வடிவத்தில் அவற்றைக் கூறுவது கடினம். இருப்பினும் நாங்கள் அப்போது புலிகளின் காவற்றுறையினரின் கண்காணிப்பிலுள்ள பணயக் கைதிகள்.

சுமார் ஒரு மணித்தியாலப் பயணத்தின் பின்னர் சோதனைச் சாவடி அருகே வாகனம் நிறுத்தப்பட்டது. எங்களை இறங்குமாறு கூறினர். புலி உறுப்பினர்கள் வாகனத்தில் ஏறி மூலை முடுக்கெல்லாம் சோதனையிட்டனர். எங்களையும் புதுமையான விதத்தில் சோதித்தனர். எங்களைக் கூட்டிச சென்றவர்களையும் சோதித்தனர். அதன் பின்னர் செல்ல அனுமதித்தனர்.

மீண்டும் பயணம் இடைக்கிடையே தமிழ்ப் பொதுமக்களைக்காண முடிந்தது. மிகச் சிறிய குடிசைகளிலேயே அவர்கள் வாழ்கின்றனர். அவர்கள் மிகவும் ஏழ்மையுடனும் கஷ்டங்களுடனும் வாழ்வதை அவதானிக்க முடிந்தது. சில இடங்களில் வயல்கள் காணப்பட்டன. நல்ல விளைச்சலான வயல்கள்.

ஒரு மணித்தியாலப் பயணத்தின் பின்னர் மீண்டும் சோதனைச் சாவடி. மீண்டும் சோதனைகள் இவ்வாறு பி.ப.4 மணிவரை அடர்ந்த காட்டின் ஊடாக அழைத்துச் செல்லப்பட்டோம். அந்தக் காட்டின் மத்தியில் விடுதலைப் புலிகளின் முக்கிய பணிமனை அமைந்திருந்தது. புலி உறுப்பினர்கள் வந்து அரசியல் பிரிவு பணிமனைக்கு அழைத்துச் சென்றனர்.

அது ஒரு பெரிய வீடு. ஜெனரேட்டர் மூலம் மின்சாரம் வழங்கப்பட்டிருந்தது. நாங்கள் அங்கு சென்ற சிறிது நேரத்தின் பின்னர் பாதுகாப்பு வீரர்கள் புடைசூழ தமிழ்ச்செல்வனும் அவரது குழுவினரும் அங்கு வந்தனர்.

தெற்கிலிருந்து உறவுதேடி வந்த சிங்களவர்களாகிய எம்மை மிக மகிழ்ச்சியுடன், சகோதர பாசத்துடன் வரவேற்றனர்.

கலந்துரையாடல் ஆரம்பமானது. இராணுவ நடவடிக்கைகளின் போது காணாமற்போன எங்கள் பிள்ளைகள குறித்து - எமது உறவினர்கள் குறித்துத் தெரிவித்தோம் அவர்களைப் பார்த்துச் செல்ல - அவர்களை மீட்டுச் செல்ல - வந்திருப்பதாகத் தெரிவித்தோம்.

இவை அனைத்தையும் தமிழ்ச்செல்வன் நன்கு செவிமடுத்தார். அதன பின்னர் மிகுந்த நல்லுறவுடன் உரையாடினார். உரையாடலில் தமிழ்ச்செல்வன் கூறியதாவது:-

யுத்தம் என்பது துன்பமானது. இந்த முடிவில்லாத யுத்தம் காரணமாக தென்பகுதி மக்களும் வடபகுதி மக்களும் துன்பங்களை அனுபவிக்கின்றனர். நாங்களும் யுத்தம் முடிவடைய வேண்டும் என்றே விரும்புகிறோம். அதனாலேயே நாங்கள் யுத்த நிறுத்தத்தை நான்குமாதங்கள் கடைப்பிடித்தோம். இருப்பினும் உங்களது அரசு எமது யுத்த நிறுத்தத்திற்கு யுத்தத்தின் மூலம் பதிலளித்தது. இதனாலேயே நாங்கள் கட்டுநாயக்கா விமானத் தளத்தின் மீது தாக்குதலை மேற்கொண்டோம். அந்தத் தாக்குதலின் போது நாங்கள் நினைத்திராத அளவிற்கு பலன்கள் கிடைத்தன. அரசு நிலை தடுமாறியுள்ளது.

யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்படவேண்டும் என்பதே எமது விருப்பமாகும். எந்த வேளையிலும் சமாதானப் பேச்சுக்களை மேற்கொள்ள நாங்கள் தயாராயுள்ளோம். அரசின் எந்த மட்டத்திலான பிரதிநிதிகளுடனும் பேச்சுக்களை மேற்கொள்ள நாம் தயார். எனவே, நீங்கள் போய் எங்களுடன் பேச்சு வார்த்தைகளை மேற்கொள்ளுமாறு உங்கள் ஆள்களிடம் கூறுங்கள். யுத்தத்தை யுத்தத்தால் வெல்ல முடியாது எனத் தெரிவியுங்கள். சமாதானத்தால் வெற்றி பெற இணையுமாறு கூறுங்கள்.

இந்த யுத்தம் முடிவுக்கு வந்ததும் நாங்கள் உங்கள் பிள்ளைகளை உங்களிடம் ஒப்படைப்போம். அதுவரை அவர்கள் எமது பாதுகாப்பிலேயே இருப்பார்கள் - எனக் கூறினார்.

இந்தக் கலந்துரையாடல் மாலை 7 மணிக்கு முடிவுற்றது. அதன் பின்னர் இரவு உணவு பரிமாறப்பட்டது. தமிழ்ச்செல்வன், அரசியல் பிரிவு நிர்வாக அலுவலர் தங்கன், மொழி பெயர்ப்பாளர் ஜோர்ஜ், புலி உறுப்பினர் தொல்காப்பியன் ஆகியோர் உட்பட கலந்துரையாடலில் கலந்து கொண்ட குழுவினர் எம்முடனிருந்து உணவருந்தினர். கொழும்பில் தரமான ஹோட்டல் ஒன்றில் கிடைக்கும் உணவை ஒத்த - ருசியான உணவு வழங்கப்பட்டது.

**தமிழில்: கஜனி**

அன்றிரவை அந்தக் காட்டிலேயே கழித்தோம். தொலைவில் கேட்கும் குண்டுச் சத்தங்கள் வனவிலங்குகளின் குரல்கள் மற்றும் பல்வேறு ஒலிகள் உறவினர்களின் மனதைக் குழப்பின. பல ஆண்டுகளுக்கு முன்னா இராணுவ நடவடிக்கைகளின்போது காணாமற்போன படைவீரர்கள் தமது உறவினர்களை கனவில் சந்தித்து உரையாடினர்.

சிறிது நேர நித்திரையின் பின்னர் கனவின் நினைவால் உருவான கண்ணீருடன் மறுநாள் காலை அவர்கள் நித்திரைவிட்டு எழுந்தனர். காலைத் தேநீர், காலை உணவு அனைத்தும் வழங்கப்பட்டன. வணக்கம், ஆயுபோவான் ஆகிய மரியாதை வார்த்தைகள் பரிமாறப்பட்டன.

மீண்டும் சந்திக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு மனதில் உருவானது. தங்கள் பிள்ளைகளை, உறவினர்களை இந்தக் காட்டிற்குள் வந்து அழைத்துச் செல்லும் நாள் எப்போதாவது உருவாகும் என்ற எதிர்பார்ப்புக்கு - முயற்சிகளுக்கு - அர்ப்பணிப்புகளுக்கு - ஜீவன் உருவாகாமலா போகும்? இருப்பினும் அந்த நாள் வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையே சமாதானப் பறவை பறந்த பின்னரே உதயமாகும். உண்மையில் அந்த நாள நாளையா? அல்லது நாளை மறுதினமா? என அறுதியிட்டுக் கூற முடியாமல் உள்ளது.

இருப்பினும் அந்த மகிழ்ச்சியான - அழகான - நாள் உதயமாகியே தீரும்.

மடு மாதாவே! அந்த அழகிய நாளை விரைவில் உதயமாக்கு. காணாமற்போன படைவீரர்களின் அமைப்புடன் நாமும் பிரார்த்திப்போமாக! ★

# ஆவணித் திருவோணத்தில் ஆடலரசனைத் தரிசிப்போம்!

ஓணம் பண்டிகை என்றால் மலையகமெங்கும் ஒரே கொண்டாட்டம்தான. ஆவணி மாதத் திருவோண நட்சத்திரமன்று ஓணம் பண்டிகை கொண்டாடப்பட்டுவருகிறது.

**ஞானக்கதிர்**

இன்றைய தினம் நடராஜப் பெருமானுக்குரிய விசேட அபிஷேகத் தினங்களில் ஒன்றாகும். பொன்னம்பலவாணேஸ்வர ஆலயத்தில் பொன்னம்பலவாணேஸ்வரரின் அபிஷேகக் காட்சியை இன்று பக்தர்கள் கண்ணாரக் கண்டுகளித்து கடத்தற்கரிய இப்பிறவிப் பெருங்கடலை நீந்திக் கடந்து இம்மையில் நல்வாழ்வும் மறுமையில நற்கதியும் அடையலாம்.

பொன்னம்பலவாணேஸ்வரப் பெருமானைப் பக்தர்கள் -

*'இறவாத இன்பஅன்பு வேண்டிப்பின்*
*வேண்டுகின்றார்*
*பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்*
*உன்னையென்றும்*
*மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான்*
*மகிழ்ந்து பாடி*
*அறவாநீ யாடும் போதுன் அடியின்கீழ்*
*இருக்க வென்றார்.'*

- என்று உளமுருகி வேண்டிப் பாடித் துதித்து எம்பெருமானின் அபிஷேகக் காட்சியைக் கண்ணாரக் கண்டு மகிழ்வர்.

ஒரு பண்டிகையாகவும், விரத நாளாகவும் இன்றைய தினம் சைவ மக்களிடையே அனுட்டிக்கப்பட்டுவருகிறது. குறிப்பாக இலங்கையில் வாழும் இந்தியப் பூர்வீக மக்களிடையே அனுட்டிக்கப்பட்டுவருகிறது. மிகச் சிறப்பாக மலைநாட்டவர்களிடையே ஓணம் பண்டிகை இன்றும் ஒரு முக்கிய வைபவமாகக் கொண்டாடப்பட்டுவருகிறது.

**வி.யாழினி**

காலையில் எழுந்ததும் நீராடிப் புத்தாடை அணிந்து சிவன் கோயில்களிற்குச் சென்று எம்பெருமானைத் தரிசித்து வழிபடுவர். பின்பு வீட்டிலே செய்த பலகாரங்களையும், சிற்றுண்டி வகைகளையும் உறவினர் வீடுகளிற்கு அனுப்பியும் வீட்டிற்கு வந்த விருந்தினர்களை உபசரித்தும், உறவினர், நண்பர்களின் வீடுகளிற்குச் சென்று



இன்றைய நாளை மகிழ்ச்சியுடன் மலையக மக்கள் அனுபவிப்பர்.

பொது இடங்களில் அமைக்கப்பட்ட மேடைகளிலும், அரங்குகளிலும் பெண்கள் தமது கைகளால் கும்மி அடித்து ஆடியும், நாடகங்கள், நாட்டியக்கூத்துப் போன்றவற்றை அரங்கேற்றியும், சிறுவர்கள் பட்டாசுகளை வெடிக்க வைத்தும் இன்றைய நன்னாளை மகிழ்சிகரமாகக் கொண்டாடுவர். ✻

# சின்னஞ்சிறு விளம்பரம்


## வீடு விற்பனைக்கு

2 பரப்புக் காணியுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு:- 36/3, புகையிரத ஒழுங்கை, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (91732)

கலட்டி ஒழுங்கை, கோண்டாவில் மேற்கில் 5 பரப்புக் காணியுடன் சகல வசதிகளுமுடைய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: சி.சிறீகணேசன், பரணி மருந்தகம், காங்கேசன்துறை வீதி, கோண்டாவில் (தாவடிச் சந்திக் கருகில்) (91684)

## விற்பனைக்கு

வீட்டுப் பாவனைக்குரிய குளிர்சாதனப் பெட்டி ('சிசில்') விற்பனைக்குண்டு. தொடர்பு: S.ரஞ்சித், இல.54, 3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (91747)

## இதோ வெளிவந்துவிட்டது

வழிகாட்டி 2. O/L பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன். தமிழ், கணிதம், வரலாறும் சமூகக் கல்வியும் 1, சித்திரம், விஞ்ஞானமும் தொழில் நுட்பமும். அனைத்துப் பாடங்களும் ஒரே நூலில். விலை 55/=. தொடர்புகளுக்கு:- 078-666608. (91745)

## பிரத்தியேக வகுப்புக்கள்

எமது "நியூ வீணா கானம்" இசை மன்றில் ஆண்டு 6-11 வரையிலான கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம், சமூகக்கல்வி ஆகியன. ஆரம்பம்: 01-09-2001. தொடர்பு: வாசுகி ரங்கன் 60, வைமன் வீதி, நல்லூர். (91707)

## ENGLISH

O/L, A/L, G.A.Q, B.A. மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான வகுப்புக்கள் நடைபெறுகின்றன. K.சோமசுந்தரம், சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (91665)

## A/L LOGIC

2002, 2003 கல்வியாண்டுக்கான அளவையியல் பிரத்தியேக வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன. தொடர்பு:- K.Baba, சந்தைகிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (91681)

## தவறிவிட்டது

காளிகோயிலடி, இடைக்காடு, அச்சுவேலி என்ற முகவரியைச் சேர்ந்த திருமதி இராசேஸ்வரி வேலாயுத பிள்ளை என்பவரது தேசிய அ.அ. (இல.55621094V), விசேட அ.அட்டை (இல.0903005323)என்பனவும் மற்றும் வே.தர்சனின் விசேட அ. அட்டை (இல. 0903036975)யும் வே.லாவன்யாவின் விசேட அ. அட்டையும் செல்வச்சந்நிதி கோயிலில் 27.08.2001இல் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் அல்லது அச்சுவேலி தபாலகத்தில் ஒப்படைக்கவும். 91755)

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில்
உற்பத்தி செய்யப்பட்ட

## கோழித்தீவனங்கள் விற்பனைக்கு

எமது சங்கத்தில் தரமான, குருணியாக்கப்பட்ட கோழித்தீவனங்கள் விற்பனைக்கு உண்டு. கோழிவளர்ப்போர், பண்ணையாளர்கள் தங்களுக்கு வேண்டிய பின்வரும் தீவனங்களுக்கு உடன் சங்க அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும்.

(1) புறொயிலர் ஸ்ராட்டர் தீவனம்
(2) புறொயிலர் பினிசர் தீவனம்
(3) சிக்ஸ் ஸ்ராட்டர் தீவனம்
(4) குறோவர் தீவனம்
(5) லேயர் தீவனம்

தேவையானவர்கள் வேண்டிய அளவை முன்கூட்டியே ஒழுங்குசெய்து பெற்றுக்கொள்ளவும்.

**உடனடியாக நாடுங்கள்.**
**மிகக்குறைந்த அளவே இருப்பில் உண்டு.**

பொது முகாமையாளர்,
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
*திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.*
(C/18068)

## கண்ணீர் அஞ்சலி

*ஆவரங்கால் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட*
**அமரர் வேலன் பரமு**
*(லொறிக் காப்பாளர்)*

எமது சங்கத்தில் லொறிக் காப்பாளராகக் கடமையுணர்வுடனும், சேவை மனப்பாங்குடனும் கடமையாற்றிவந்த **வேலன் பரமு** அவர்கள் 30-06-2001இல் மரணமெய்திய செய்தியறிந்து ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும் நாம், எமது அஞ்சலியைச் செலுத்துவதோடு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்துக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

வலி.கிழக்கு(வடபகுதி)
பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம்,
தலைமைக் காரியாலயம், ஆவரங்கால்,
புத்தூர்.

பணிப்பாளர்களும்,
பணியாளர்களும்.

(C/18069)

## பாராட்டி நன்றி கூறி வாழ்த்துகின்றோம்

**பொலிகண்டி வீரபத்திரர் ஆலய**
புனர்நிர்மாண வேலைகளை முடிக்கும் நல்நோக்கோடு
கட்டம் கட்டமாக நிதி உதவி வழங்கிக்கொண்டிருக்கும



ஈ.ம.ஜ.கட்சியின் செயலாளர் நாயகம்,
மாண்புமிகு அமைச்சர்
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்



யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும்
ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட
பிரதம அமைப்பாளருமான கௌரவ
**கே.வி.குகேந்திரன் (ஜெகன்)**
அவர்களையும்



நல்லூர்ப் பிரதேச சபைத் தலைவர்
**உயர்திரு. க.மணிபல்லவராஜன் (நிசாந்தன்)**
அவர்களையும்

பருத்தித்துறை பிரதேச
சபைத் தலைவரும்
வடமராட்சி ஈ.பி.டி.பி.
அமைப்பாளருமான
**உயர்திரு. ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன்**
அவர்களையும்

கரவெட்டி பிரதேச ஈ.பி.டி.பி.
அமைப்பாளர்
**உயர்திரு. பா.ரவீந்திரன்**
**(ராசிக்)**
அவர்களையும்

வல்வெட்டித்துறை பிரதேச அமைப்பாளர்
**உயர்திரு. யோகராசா**
அவர்களையும்

*எமது ஆலய பரிபாலனசபையினரும் ஊர்மக்களும்*
*நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

ஆலய பரிபாலன சபை
பொலிகண்டி வீரபத்திரர்
தேவஸ்தானம் (91751)

*பொலிகண்டி,*
*வல்வெட்டித்துறை.*


## வடமராட்சி கிழக்கில் பனை நடுகை

வடமராட்சி கிழக்கு,ஓக.31

வடமராட்சி கிழக்கில் பனை அபிவிருத்தியை விஸ்தரிக்கும் முகமாக பனம்விதை நடுகைத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இப்பகுதியில் பனம் விதைகளை நடுகை செய்வதற்கு இடங்களை அடையாளம் காண்பதற்கு, கிராம சேவையாளர்களின் உதவியினை மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் ஊடாகப் பனை அபிவிருத்திச் சபை நாடியுள்ளது.

குடத்தனையில் ஐ.நா.அபிவிருத்தித் திட்டத்தின் அனுசரணையுடன் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட பனை அபிவிருத்தித் திட்டப் பண்ணையையும் சீரமைத்துப் பனை உற்பத்தியினை நடைமுறைப்படுத்துமாறு அப்பகுதி மக்கள் பனை அபிவிருத்திச் சபையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஐ-182)

## ஆலயத்தில் மடம் அமைப்பு

வடமராட்சி கிழக்கு,ஓக.31

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சுற்றாடலில் யாத்திரியர்கள் தங்கக்கூடிய அறைகள் மற்றும் மண்டப வசதிகளைக்கொண்ட புதிய மடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் கடந்த புதன் கிழமை நடுகை செய்யப்பட்டது.

எதிர்வரும் திருவிழாக் காலத்துக்கு முன் இம்மடத்திற்கான வேலைகள் பூர்த்தியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ-182)

## சைக்கிள், மரதன் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஓக.31

யாழ்.பிராந்திய மக்கள் வங்கி விளையாட்டுக் கழகம் நடத்தும் சைகிள் ஓட்டம், மரதன் ஓட்டப் போட்டிகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளன.

சைக்கிளோட்டப் போட்டி காலை 7மணிக்கு சுன்னாகம் பஸ் நிலையத்தில் இருந்தும், மரதன் ஓட்டப் போட்டி காலை 6.30 மணிக்கு திருநெல்வேலி சந்தியில் இருந்தும் ஆரம்பமாகும். (க-4)

## துர்க்கை அம்மன் ஆலயத்தில் பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஓக.31

அருள்மிகு தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் தீர்த்தத் திருவிழாவான இன்று மாலை கொடியிறக்க உற்சவத்தின் பின்னர் ஆலயத்தில் பரிசளிப்பு வைபவம் இடம்பெறவுள்ளது.

ஆலய இரதோற்சவத்தை ஒட்டி சுன்னாகம் துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ் நேற்றைய உதயனில் வெளியிட்ட சிறப்புமலரில் இடம்பெற்ற ஆக்கங்களை வழங்கிய பாடசாலை மாணவர்கள் இன்றைய நிகழ்வில் பரிசளித்துக் கௌரவிக்கப்படுவர்.

துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பரிசில்களை வழங்குவார். (ஜ)

# தெய்வீக ஸ்தலங்களில்



யாழ். மறைமாவட்டத்தைச் சேர்ந்த மூன்று அருட் சகோதரர்கள் அண்மையில் யாழ்.மறைமாவட்ட ஆயர் அதிவண.தோமஸ் சவுந்தரநாயகத்தால் அருட்குருவானவர்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டனர்.

யாழ்.மரியன்னை பேராலயத்தில் நடைபெற்ற திருநிலைப்படுத்தும் சடங்கின் போது புதிய குருவானவர்களான அருட்தந்தையர்கள் எஸ்.ஏ.றொசான், எஸ்.ஏ.அருட்செல்வன், எஸ்.றோய் பேடினன்ட் ஆகியோர் தமது முதலாவது ஆசீர்வாதத்தைத் திருப்பலியில் பங்குகொண்டவர்களுக்கு வழங்குவதையும், யாழ்.மறைமாவட்ட ஆயர் அதிவண.தோமஸ் சவுந்தரநாயகம், யாழ்.மறைமாவட்ட குரு முதல்வர் ஜே.பி.ஈ.செல்வராஜா ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (ம-6)



ஈச்சமோட்டை விதானையார் வீதியைச் சேர்ந்த சிவஸ்ரீ பா.பாலகிருஷ்ணக் குருக்களுக்கு சிவாசார்ய அபிஷேகம் செய்து வைக்கும் நிகழ்வு அண்மையில் ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஞானவைரவர் ஆலயத்தில் இடம்பெற்றது.

மாவிட்டபுரம் பிரம்மஸ்ரீ சுந்தரமூர்த்திக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற அந்த நிகழ்வில் எடுக்கப்பட்ட படம்.

ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ தி.பாலசுப்பிரமணியக்குருக்களும் படத்தில் உள்ளார். (ஐ-17)



கும்பளை லட்சுமணன் தோட்டம் வீரமாகாளி வடபத்திரகாளி அம்மன் ஆலயத்தின் மண்டலாபிஷேகப் பூர்த்திவிழா அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்ட பேராசிரியர் அ.சண்முகதாஸ், சிவஸ்ரீ சு.முத்துக்குமாரசுவாமிக் குருக்களுக்கு பொன்னாடை போர்த்தி, நினைவுச் சின்னம் வழங்குவதைப் படத்தில் காணலாம். அருகில் சிவஸ்ரீ தியாகசோமஸ்கந்தராசாக்குருக்கள் காணப்படுகின்றார். (ஐ-7)



திருமாளை அருள்மிகு லிங்கப்பிள்ளையார் ஆலயத்தில் புதிதாக நிறுவப்பட்ட மணிக்கோபுரத்தை வலி.கிழக்குப் பிரதேச சபைத் தலைவர் பூ.குணசிங்கம் அண்மையில் திறந்து வைத்தசமயம் எடுக்கப்பட்ட படம்.

கோப்பாய் அபிவிருத்தி ஆலோசனைச் சபையின் தலைவர் கி.தாக்வடிவேல், ஆலய பரிபாலகரும் அர்ச்சகருமான சிவஸ்ரீ ச.வைத்தியநாதன் ஆகியோரும் படத்தில் உள்ளனர். (டு)

# புலிகளை அழிப்பதாகக் கூறிக்கொண்டு நாட்டை அழிக்கின்றார் ஜனாதிபதி

## ரணில் கூறுகின்றார்

கொழும்பு, ஓக. 31

விடுதலைப் புலிகளை அழிக்கவேண்டும் என்பதற்காக அரசுடன் இணைந்து அவர்கள் சொல்வதை கேட்க வேண்டும் என்பதில் எமக்கு ஆர்வம் இல்லை. புலிகளை அழிப்பதாகக் கூறிக்கொண்டு நாட்டை அழிக்கின்றார் சந்திரிகா.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

தாஜ்சமுத்திரா ஹோட்டலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு — கிழக்கு பிரச்சினை அரசியல் ரீதியில் தீர்க்கப்படவேண்டிய ஒரு பிரச்சினை. தற்போதைய நிலையின் படி காபந்து அரசொன்றை அமைத்து நியாயமான, நீதியான, சுதந்திரமான பொதுத்தேர்தலொன்றை நடத்துவதைத் தவிர ஜனாதிபதிக்கு வேறு வழியில்லை.

உதவி ஜனாதிபதி பதவியொன்றை உருவாக்கவேண்டும் என்று ஜனாதிபதி வற்புறுத்தியதனால் பேச்சு தோல்வியில் முடிவடைந்தது.

அரசாங்கத்திற்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லை. ஆகவே அரசாங்கத்தை நாம் அமைப்பதற்கு அனுமதித்து விலகிக்கொள்ள வேண்டும். அல்லது நாடாளுமன்றத்தைக் கூட்டி நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முகம் கொடுக்கவேண்டும். அதுவும் இல்லை என்றால் நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டுப் பொதுத் தேர்தல் நடத்த வேண்டும். இவை எதனையும் செய்யாமல் அதிகாரத்திலேயே ஜனாதிபதி கண்ணும் கருத்துமாக இருக்கிறார். இப்பொழுது மக்கள்விடுதலை முன்னணியினருடன் பேச்சு நடத்தப்போகிறார். இதுவும் வெற்றி அளிக்கப்போவது இல்லை. நாடாளுமன்றத்தை கலைத்துவிட்டுப் பொதுத் தேர்தல்களை நடத்துவதைத் தவிர அவருக்கு வேறு வழி இல்லை.

1994 ஆம் ஆண்டு முதல் புலிகளுடனான பேச்சுக்கள் தோல்வியை தழுவியதன் பின்னர் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றார். புலிகளை அழிப்பதற்கு புறப்பட்ட அவர் இன்று புலிகளைத் தவிர நாட்டிலுள்ள மற்ற எல்லாவற்றையும் அழித்து வருகின்றார். புலிகள் முன்னரிலும் பார்க்க பலம் வாய்ந்தவர்களாக இருக்கின்றனர்.

இன்று நாடு குட்டிச்சுவராகிப் போய்விட்டது. பொருளாதாரம் சீர்குலைந்துவிட்டது. நிறுவனங்கள் பல மூடப்படுகின்றன. ஊழியர்கள் வேலை இழக்கின்றனர். விமான நிலையம் மூடப்பட்டதொரு நிலையில் இருக்கின்றது. துறைமுகமும் இதே வகையில் மூடப்பட்ட நிலைமையிலேயே இருக்கின்றது. இலங்கை 'கடன்கார நாடாக' மாறிவிட்டது.— என்று ரணில் மேலும் தெரிவித்தார். (ஐ-3)

# சந்நிதி இரதோற்சவம் நாளை

வடமராட்சி, ஓக. 31

பிரசித்திபெற்ற தொண்டமனாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி கோயில் வருடாந்த மஹோற்சவத்தின் சப்பறத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்கு நடைபெறும்.

இரதோற்சவம் நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கும் தீர்த்தோற்சவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கும் இடம்பெறும்.

அன்றையதினம் மாலை நடைபெறும் மௌனத்திருவிழாவுடன் வருடாந்த மஹோற்சவம் நிறைவு பெறும்.

(ஐ-173-31)

# இனமானத்துக்கு பங்கமின்றி மக்கள் பணி ஆற்றுகின்றோம்

## எம். கே. சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

சாவகச்சேரி, ஓக. 31

பதவிக்காக எவரிடமும் மண்டியிடாது, தமிழினத்தின் கௌரவத்துக்குப் பங்கம் இல்லாமல், மக்களின் தேவைகளை நிறைவேற்றி வருகின்றோம்.

—இவ்வாறு வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவரும், 'ரெலோ' அமைப்பைச் சேர்ந்தவருமான, எம். கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

நேற்றுக் காலை வல்வெட்டித்துறை நகர சபையின் புதிய அலுவலகத்தை திறந்து வைத்து உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார்.

எம். கே. சிவாஜிலிங்கம் தனது உரையில் மேலும் கூறியதாவது:-

கடந்த 15 வருடங்களுக்கும் மேலாக வல்வெட்டித்துறையில் மக்கள் பிரதிநிதிகள் இல்லாத குறை நிலவியது. இந்தக் குறையை நீக்க, நாம் எமது உயிரைத் துச்சமென மதித்து நகரசபை நிர்வாகத்தைப் பொறுப்பேற்றோம்.

நாம் பதவிக்கு வந்து 3 ஆண்டுகள் கழிந்துவிட்டன. மேலும் எங்கள் பதவிக்காலம் முடிவடைய 6 மாதங்களே உள்ளன. அதற்குள் மக்களுக்குச் செய்யக்கூடிய பணிகளை செய்துவிட முயற்சிக்கின்றோம்.

நாம் திறந்து வைத்துள்ள புதிய அலுவலகக் கட்டடம் 1985 ஆம் ஆண்டு சுமார் 23 லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டது. ஆனால் இன்று இதன் ஒரு பகுதி சுமார் 35½ லட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாண்டு இந்தப் புனரமைப்பைச் செய்வதற்கு ஒரு சதம் கூட நிதி ஒதுக்கப்படவில்லை. ஆனால் நாங்கள் மக்களின் தேவைகளை உணர்ந்து சாலைகள், சுகாதாரம், குடிதண்ணீர் போன்ற தேவைகளை எங்கள் சக்திக்கு உட்பட்ட அளவு நிறைவு செய்துள்ளோம், புதிய கட்டடங்களையும் கட்டி வருகின்றோம், அவ்வாறே மீன் சந்தைக் கட்டடத்தையும் நிறைவு செய்வோம்.

ஆனால் இவ்வாறான புனரமைப்புகள் எதுவுமே நிரந்தரமில்லை, சமாதானம் கிட்டும் வரை எம்மக்களுக்கு நிம்மதி இல்லை. மக்கள் ஏக்கத்துடன் வாழ்கிறார்கள். எனவே அரசியலில் கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

— இவ்வாறு அவர் கூறினார்.

யாழ். மாநகர சபை துணை மேயர் கந்தையன் நிகழ்வில் கலந்துகொண்டுபேசுகையில் — யாழ்ப்பாண மாநகர சபைப் பகுதி மிக முக்கிய பிரதேசம். அப்பகுதியில் உள்ள வாய்க்கால்கள், கட்டடங்கள் போன்றவை சேதமடைந்துள்ளன, அவற்றுக்காக மாநகர சபை பல லட்சம் ரூபா மதிப்பில் வேலைத்திட்டங்களைத் தீட்டியது. கடந்த ஏப்ரல் மாதம் யாழ். செயலகத்தில் இடம் பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இந்தத் திட்டங்கள் ஆராயப்பட்டன, ஆனால் இதுவரை இந்தத்திட்டங்களுக்காக ஒரு சதமும் கிடைக்கவில்லை.

ஆனால் நாம் எமது வரியிறுப்பாளர்களிடமிருந்து பெற்ற பணத்தில் 40 லட்சம் ரூபா செலவில் அபிவிருத்திப் பணிகளைச் செய்துள்ளோம்.

யாழ். மாநகரசபைக்கு வாகனங்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. அதே போல வல்வெட்டித்துறை, சாவகச்சேரி, பருத்தித்துறை நகரசபைகளுக்கும் வாகனங்கள் இல்லை. நாம் வாடகைக்கு வாகனங்களை அமர்த்துகின்றோம்.

இன்று பல வேலைத் திட்டங்கள் செயற்படாமல் இருக்கின்றன.

நாம் எமது உயிரை துச்சமென மதித்து செயற்படுகின்றோம். எமது மக்களுக்கு அளித்த வாக்குறுதி அடிப்படையில் செயற்படுகின்றோம். இச் செயற்பாடுகள் ஊழியர்களின் ஒத்தாசையுடன் நிறைவேற்றப்படுகின்றன —என்றார்.

யாழ். மாநகர சபை மேயர் ந.ரவிராஜின் ஆசிச் செய்தியையும் துணை மேயர் கந்தையன் நிகழ்வில் வாசித்தார்.

திறப்பு விழாவில் உள்ளூராட்சிப் பிராந்திய ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமி, வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி இ. மயிலேறும்பெருமாள், பருத்தித்துறை பிரதேசச் செயலர் ஆ.சிவசுவாமி, பிரதம பொறியியலாளர் ரி. சுந்தரகுமார், பருத்தித்துறை நகரசபைத் தலைவர் கென்னடி, வல்வெட்டித்துறை பொலீஸ் அத்தியட்சகர்பெரேரா உட்பட பலர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

ஆசியுரைகளை சுவாமி சித்ரூபானந்தாவும் அருட்தந்தை அருள்நேசனும். வழங்கினர்.

நிகழ்வின் ஆரம்பத்தில் அலுவலகப் பெயர்ப்பலகையை நகரசபைத் துணைத் தலைவர் க.சந்திசேகரம்திரை நீக்கம் செய்து வைத்தார்.

(ஓ-31)

# தென் மராட்சி, பச்சிலைப்பள்ளியிலிருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கு பட்டியல் மூலமே நிவாரணம்

யாழ். மாவட்டத்தில் அடுத்த கட்ட நிவாரணம் உணவு முத்திரை மூலம் விநியோகம் செய்யப்படவுள்ள போதிலும் சாவகச்சேரி, பச்சிலைப்பள்ளி போன்ற இடங்களில் இருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கான நிவாரணம் வழமைபோல் பட்டியல் மூலமே வழங்கப்படவுள்ளது.

இம்முறை நிவாரண மீளாய்வுப் படிவம் நிரப்பிக் கொடுத்து கிராம அலுவலர் பிரிவுகளில் அமைக்கப்பட்ட மீளாய்வுக் குழுக்களின் சிபார்சின் அடிப்படையிலேயே நிவாரண முத்திரை விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆனாலும் குழு சிபார்சு செய்தவர்களில் ஒரு பகுதியினரும் கடந்த காலங்களில் நிவாரணம் பெற்று வந்தனர். இவர்களுக்கு வழமை போன்று பட்டியல் மூலம் விநியோகம் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(க-86)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக. 31

அற்புதா றேடிங் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். உதைபந்தாட்ட லீக் தலைவர் கிண்ணத்துக்காக நடத்தி வரும் உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு , யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில்நடைபெறவிருக்கின்றது.

இந்த இறுதியாட்டத்தில் அற்புதா றேடிங் நிறுவனத்தின் உரிமையாளர் அற்புத தேவராசா கௌரவ விருந்தினராகக் கலந்துகொள்வார்

இறுதியாட்டத்தில் பாசையூர் சென். அன்ரனீஸ் வி. க. அணியும் குருநகர் பாடும்மீன் வி. க. அணியும் மோதவிருக்கின்றன.

நாளை இடம்பெறும் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் வி. க. அணியும் குருநகர் சென். றோக்ஸ் வி. க. அணியும் மோதும்.-

(ஐ-3-51)

★ ★ ★

யாழ். பிராந்திய மக்கள் வங்கியின் விளையாட்டுக் கழகம் வங்கியின் 40 ஆவது ஆண்டு விழாவையொட்டி திணைக்களங்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களிடையே யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் நடத்திவரும் துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியில் நாளையும் நாளை மறுதினமும் இடம் பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

### நாளை

★ பிற்பகல் 3.00 மணி— புனித பத்திரிசியார் கல்லூரி ஊழியர் வி. க. அணி எதிர் யாழ் பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர் வி. க. அணி.

### நாளை மறுதினம்

★ காலை 9.30 மணி— கமநல அபிவிருத்தி சேவை ஊழியர் வி. க. அணி எதிர் யாழ், கல்வி வலய ஊழியர் வி. க. அணி.

★ பிற்பகல் 2.30 மணி— யாழ். போதனா வைத்திய சாலை ஊழியர் வி. க. அணி எதிர் சனி மாலை இடம் பெறும் ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி. (ஐ-3)

★ ★ ★

யாழ். பிராந்திய மக்கள் வங்கி விளையாட்டுக்கழகம் வங்கிகளுக்கிடையில் நடத்தும் துடுப்பாட்டச் மற்றுப் போட்டியில் நாளைமறுதினம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ காலை 9 மணி—ஹற்றன் நஷனல் வங்கி எதிர் இலங்கை வங்கி.

★ நண்பகல் 12 மணி—மக்கள் வங்கி எதிர் தேசிய சேமிப்பு வங்கி.

★ பிற்பகல்3மணி—ஹற்றன் நஷனல் வங்கி எதிர் வர்த்தக வங்கி. (ஐ-3)

★ ★ ★

யாழ். பிராந்திய மக்கள் வங்கி விளையாட்டுக்கழகம் கழகங்களுக்கிடையில் நடத்தி வரும் மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியின் ஆட்டங்கள் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் திருநெல்வேலி வை.எம். எச். ஏ. மைதானத்தில் இடம்பெறவிருக்கின்றன.

ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரங்களை திருநெல்வேலி வை.எம். எச். ஏ. அலுவலக அறிவிப்பு பலகையில் இன்று முதல் பார்வையிடலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

# வெற்றிடங்களுக்கு ஆள்சேர்ப்பு

யாழ்ப்பாணம், ஓக. 31

தீவக வலயக் கல்வி அலுவலகத்தில் விஞ்ஞானம், ஆரம்பக்கல்வி, உடற்கல்வி, தமிழ் ஆகிய பாடங்களுக்கான உதவிக் கல்விப்பணிப்பாளர் பதவிகளுக்கு ஆள்களைச் சேர்ப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அத்துடன் உடற்கல்வி, தமிழ், ஆரம்பக்கல்வி, கணிதம், விஞ்ஞானம், சங்கீதம் ஆகிய பாடங்களுக்கான முதன்மை ஆசிரியர் பதவிகளுக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தகுதியானவர்கள் தாம் சார்ந்த பாடசாலை அதிபர், கோட்டக் கல்வி அதிகாரி ஊடாக விண்ணப்பங்களை தீவக வலயக் கல்வி அலுவலகத்திற்கு எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்குமாறு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(ஐ-3)

### சமய சந்நிதி.:.

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சண்டிலிப்பாய் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9-00மணிக்கு விஷேட சங்காபிஷேகம் நடைபெற்று அம்பாள் திருவூஞ்சல், வீதி வலம் என்பன இடம்பெறும்.

தொடர்ந்து நண்பகல் அன்னதானமும் நடைபெறும்.

(ஐ-17)

★ ★ ★

யாழ்ப்பாணம் பஸ்நிலைய ஸ்ரீ ஞானவைரவர் ஆலய ஆவணி ஓண விஷேட அபிஷேகம் இன்று காலை நடைபெறுவதுடன் பகல் மகேஸ்வரபூசையும் இடம்பெறவுள்ளது. (3)

★ ★ ★

துணவி சிவனின் கூடல் அருள்மிகு ஞான வைரவ சுவாமி தேவஸ்தான கும்பாபிஷேக தின சங்காபிஷேகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

(க-4)

★ ★ ★

சுன்னாகம் கிழக்கு ஊரி சாட்டி திருப்பதியுறை சிவபூத வராயர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தோற்சவமும், மாலை 5.00 மணிக்குக் கொடியிறக்க வைபவமும் நடைபெறும்.

(க)

உலர் உணவு நிவாரணம் பெறுவோருக்கு

# பால்மா பக்கெற்றுக்குப் பதிலாக உடையல் பச்சையரிசி விநியோகம்

வலிகாமம் தெற்கு,ஓக.31

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குட்பட்ட சங்கக் கிளைகளில் உலர்உணவு நிவாரணம் பெறுவோருக்கு பால்மா பக்கெட் வழங்குவதற்குப் பதிலாக உடையல் பச்சை அரிசி வழங்கப்படுவதாகப் பலர் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

ஐந்து பேரைக் குடும்ப அங்கத்தவர்களாகக் கொண்ட குடும்பத்தினருக்கு அரிசி, சீனி, பருப்பு மற்றும் பால்மா பக்கெற்றுக்கள் இரண்டு ஆகியன வழங்கப்படுவது வழமையாக இருப்பினும், இம்முறை பால்மா பக்கெற் ஒன்றை மட்டும் வழங்கிவிட்டு மிகுதிக்கு உடையல் பச்சை அரிசி வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் சங்கக் கிளைகளில் வழங்கப்படும் பற்றுச்சீட்டுக்களில் இரண்டு பால்மா பக்கெற்றுக்கள் வழங்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டு விலையும் குறிக்கப்படுகின்றது. ஏனைய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் (தெல்லிப்பழை, அளவெட்டி) குறிப்பிட்டபடி இரண்டு பால்மா பக்கெற்றுக்கள் வழங்கப்படுவதாகவும் சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் மட்டுமே இவ்வாறு பால்மாவுக்குப் பதிலாக உடையல் பச்சை அரிசி வழங்கப்படுவதாக பாவனையாளர்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர். (க-152)

PERSONAL CLASS
186/22 - குருநாதர் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
இணைந்த கணிதம்
BY:
Mr. மணிவண்ணன்
2002 - A/L
நேர்கோடு, உராய்வு } 4.00 p.m.
2003 - A/L
இருபடிச் சமன்பாடு, வேகநேர வளையி } 3.00 p.m.
ஆரம்பம்:-
01-09-2001 சனி 3.00 மணி.

## வயோதிபரை கருங்குளவிகள் தாக்கின!

பனையிலிருந்து தவறிய கருங்குளவிக் கூடு அவ்வழியே நடந்து வந்த வயோதிபரின் தலை மீது விழுந்தது. இதனால் சிதறிப் பறந்த குளவிகள் வயோதிபரை மோசமாகத் தாக்கிய சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை வரணி குடமியனில் இடம்பெற்றது. இச்சம்பவத்தில் இதேயிடத்தைச் சேர்ந்த சரவணமுத்து செல்லையா (வயது 80) என்பவரே தாக்குதலுக்கு உள்ளானார். (க-117)

## இறுதிப் போட்டி நிகழ்வுகள்

திருநெல்வேலி **THREE STAR** ஸ்போட்ஸ் கிளப்பினால் நடத்தப்படும் போட்டிகளின் இறுதி நிகழ்வும் பரிசளிப்பு வைபவமும் **T.Y.M.H.A.** இல் இன்று (31-08-2001) மாலை 4.00 மணிக்கு (**S.L.T.**) நடைபெறும். இப்போட்டிகளில் கலந்து கொண்ட கழகங்கள், வீரவீராங்கனைகள் அனைவரும் தவறாது கலந்துகொண்டு சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

*சிறப்பு விருந்தினர்*
நல்லூர் பிரதேச சபைத் தலைவர்
**மணிபல்லவராஜன் (நிஷாந்தன்)**

*திருநெல்வேலி.* (91754) - தலைவர் -

## கண்ணீர் அஞ்சலி

### வைத்திலிங்கம் சின்னையா

கைதடி சித்த ஆயுர்வேத போதனா வைத்தியசாலையில் கடமை புரியும் திரு. சின்னையா கெங்காதரன் அவர்களின் பாசமிகு தந்தையாரான வைத்திலிங்கம் சின்னையா அவர்கள் 30-08-2001 இல் காலமானதையிட்டு அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

**கைதடி சித்த போதனா வைத்தியசாலை**
**வைத்திய பொறுப்பதிகாரியும்,**
**வைத்திய உத்தியோகத்தர்களும்**
**மற்றும் உத்தியோகத்தர்களும்.**

(91757)

## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் சின்னையா

சிவன் கோயிலடி, மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், சுதுமலை மேற்கு, மானிப்பாயைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சின்னையா நேற்று (30-08-2001) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற தங்கலட்சுமியின் அன்புக் கணவரும், ஐயாத்துரை (வவுனிக்குளம்), சிவராசா (சுதுமலை), வைத்திலிங்கம் (வவுனிக்குளம்), வைரவப்பிள்ளை (கிளிநொச்சி), அமரர் சிவநாதன், சிவயோகநாதன் (சுவிஸ்), கெங்காதரன் (ஆயுர்வேத வைத்தியசாலை, கைதடி), சந்திரகலா ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவனேஸ்வரி, கலாஜோதி, மனோரஞ்சிதம், சரோஜினிதேவி, யோகேஸ்வரி, வனித்தா, பாலகிருஷ்ணன், ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜனார்த்தனன், யசிகரன், துர்மளா, சிவரூபன், ராதிகா, சதீஸ்சன், சத்தியா, நித்தியா, சுகன்யா, ஜினோதினி, ஜிவாகர், கஜந்தினி, சோபனா, பிரமிலன், மதுரதன், மதுர்ஷா, ஜீவிகா, கோகுலன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31-08-2001) வெள்ளிக்கிழமை மு.ப.11 மணியளவில் சுதுமலை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நிரந்தர முகவரி:-
*சிவன் கோயிலடி,*
*மட்டுவில் தெற்கு.*

தற்காலிக முகவரி:-
*சுதுமலை மேற்கு,*
*மானிப்பாய்.*

தகவல்.
சி.சிவராசா, சி.கெங்காதரன் - மகன்மார்
பா.சந்திரகலா - மகள்

(91766)

NEW SCIENCE HALL
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
2001 A/L
பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு
பொது சாதாரண பரீட்சை வழிகாட்டல் வகுப்பு
BY- Mr. தவசேகர்
ஆரம்பம்:-
02-09-2001 ஞாயிறு 3.00 மணி.
2ஆம், 3ஆம், 4ஆம், 5ஆம் திகதிகளில் புதிய நேரம் 3 மணிக்கு வகுப்புகள் நடைபெறும்.
(91761)

வலி.தெற்கு பிரதேச செயலக
கலாசாரப் பேரவையின்

## பௌர்ணமி கலை நிகழ்ச்சி

இடம் :- யா/இராமநாதன் கல்லூரி மண்டபம்
காலம் :- நாளை (01-09-2001) சனிக்கிழமை
நேரம் :- பிற்பகல் 3.30 மணி

நிகழ்ச்சி நிரல்:-
தலைவர் உரை
மங்கள வாத்திய இசை
கலைஞர் கௌரவிப்பு
பிரதம விருந்தினர் உரை
இசைக் கச்சேரி

கலாசாரப் பேரவை,
*வலி.தெற்கு பிரதேச செயலகம்,*
*உடுவில்.*

(91759)

ஓம்
அரி ஓம் நமோ நாராயணா



யாழ்.கோப்பாய் வடக்கில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு
ஸ்ரீ சக்கராழ்வார் ஆலயத்தின் வருடாந்த

## மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2001

**பேரன்புடைய ஸ்ரீமந் நாராயண பக்தர்களே!**

கோப்பாய் வடக்கில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீசக்கராழ்வார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நிகழும் விஷு வருஷம் ஆவணி 15ஆம் நாள் இன்று (31-08-2001) வெள்ளிக்கிழமை பகல் 12 மணியளவில் நிகழும் தேவசங்க சுபவேளையிலும் ஆவணி ஓண திருவோண நட்சத்திரத்திலும் கொடியேற்றம் நடைபெறும். பின்னர் தொடர்ந்து 11 நாள்கள் உற்சவம் சிறப்பாக நடைபெறும்.

**✪ 11 நாள்களும் அன்னதானம் நடைபெறும் ✪**

### உற்சவ கால விபரங்கள்

31-08-2001 (ஆவணி 15ஆம் நாள்) வெள்ளிக்கிழமை - கொடியேற்றம்.
06-09-2001 (ஆவணி 21ஆம் நாள்) வியாழக்கிழமை - ஈஸ்வரிமார் திருநாள்.
07-09-2001 (ஆவணி 22ஆம் நாள்) வெள்ளிக்கிழமை - வேட்டைத் திருநாள்.
பகல் 12 மணிக்கு எம்பெருமான் வேட்டையாடி வெளிவீதி வலம் வருவார்.
08-09-2001 (ஆவணி 23ஆம் நாள்) சனிக்கிழமை - சப்பறத் திருவிழா.
மாலை நேரப் பூஜை 4 மணிக்கு ஆரம்பமாகி முத்துச் சப்பறத்தில் எம்பெருமான் வெளிவீதி வலம் வருவார்.
09-09-2001 (ஆவணி 24ஆம் நாள்) ஞாயிற்றுக்கிழமை - மாலைநேரப் பூஜை 3.30 மணிக்கு ஆரம்பமாகி 4.00 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை நடைபெற்று உறியடி உற்சவம் மிகச் சிறப்பாக நடைபெறும்.
10-09-2001 (ஆவணி 25ஆம் நாள்) திங்கட்கிழமை - தீர்த்த, கொடியிறக்கத் திருநாள்
மாலை பூஜை 4.00 மணிக்கு ஆரம்பமாகும். மாவிளக்கு இடுதல், திருவூஞ்சல் நடைபெறும்.
11-09-2001 (ஆவணி 26ஆம் நாள்) செவ்வாய்க்கிழமை - ஆஞ்சநேயர் பொங்கல்.

தினமும் பூஜை நேரம்: மூலஸ்தான பூஜை 9.30 மணிக்கு.
நாகஸ்தம்ப அபிஷேகம் 10.30 மணிக்கு.
வசந்த மண்டபப் பூஜை 11.00 மணிக்கு.

**குறிப்பு:** மெய்யன்பர்கள் பால், தயிர், இளநீர், புஷ்பம், துளசி, பூமாலை போன்றவற்றைக் கொடுத்து உதவும் வண்ணம் ஸ்ரீமந் நாராயணனின் பெயரில் வேண்டுகின்றோம்.

ஸ்ரீமந் நாராயண பக்தர்கள் அனைவரும் வந்து எம்பெருமான் திருவருளை வேண்டித் தரிசித்து பிறவிப் பயனை நுகர்வீர்களாக.

*கோப்பாய் வடக்கு.*

ஸ்ரீமந் நாராயண தொண்டர்கள்.
ஸ்ரீசக்கராழ்வார் தேவஸ்தானம்.

விளம்பர அன்பளிப்பு:
அழகிய கலைநயம் எழிலுரு தொழில் வளம் உயர்தரமிகு தங்க நகைகளுக்கு
தியா நகைப் பூங்கா
213c, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C-18072)



## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில் 14-10-1975
ஆண்டவன் அடியில் 18-07-2001

### செல்வி கௌசல்யா கீதநாதன் (தீபா)

எம் குலவிளக்கே தீபா!
தீபமாய் நீயிருந்து வழிகாட்டிய நினைவுகள்தான்
வந்து செல்கின்றன. ஆனால் உன்னைத்தான்
காணமுடியவில்லை. பாவிகள் நாம் உன்னை
பறிகொடுத்துவிட்டு கதறியழுகின்றோம். நீ சென்ற
திசை தெரியாமல் தடுமாறுகின்றோம்.
நீ மறைந்தாலும் உந்தனது நினைவலைகள்
எம்மை விட்டகலாது.

இன்று (31-08-2001) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*அம்பகர் வீதி,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*

உந்தன் பிரிவால் வாடும்:
அம்மா, தம்பி, தங்கைமார்.

(91756)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 01 - 01 - 1935



மறைவு 01 - 08 - 2001

அமரர்

## இளையவி மருதலிங்கம்

அன்னாரின் மரணச்செய்தி கேட்டு நேரிலும் மற்றும் பிறவழிகளிலும் அனுதாபம் தெரிவித்தோருக்கு எமது நன்றியைத் தெரிவிப்பதுடன், இன்று (31.08.2001) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தற்காலிக முகவரி:
எம்.சந்திரசேகரம்,
எம்.எஸ்.லேன்,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

மனைவி, மக்கள்,
சகோதரர்கள், மைத்துனர்மார்,
பேறாமக்கள், மருமக்கள்.

(C/18078)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 24 - 02 - 1952



விண்ணில் 01 - 08 - 2001

அமரர் மருசலின் ஜெறாட் பீற்றர்சன் (J.P.)

வழிகாட்டியாய் விளங்கிய எங்கள் கலங்கரைவிளக்கை
அலைகடலின் படகாய் தேடுகிறோம் நாம்
நொந்த எம் மனதை தேற்றி ஆறுதல் கொள்ள
வந்தொரு முறை வழிகாட்ட மாட்டாயா?
ஆவலுடன் காத்திருக்கின்றோம் எம் அப்பாவே!

38, சென்பற்றிக்ஸ் வீதி,
குருநகர், யாழ்.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
உறவினர்கள், நண்பர்கள்.
(91768)


## தம்புள்ளவில் வைத்து இருவர் கைது!

மூதூரில் இருந்து கொழும்பு நோக்கி போக்குவரத்துச் சபையின் பஸ்ஸில் சென்று கொண்டிருந்த இருவர் தம்புள்ளவில் உள்ள பொலீஸ் சோதனை நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்கா விமானத்தளத் தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் இருவர் இந்த பஸ்ஸில் வருவதாக மூதூர் பொலீஸார் தகவல் அனுப்பியதாகவும் - அந்தத் தகவலின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் தம்புள்ள பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரன்ஜித் மீகஹதும்புற தெரிவித்தார்.

பின்னர் இருவரும் மூதூர் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்றும் அவர் தெரிவித்தார். (உ-3)

## முகமாலையில் மோதல்!

முகமாலை முன்னரங்கப் பகுதியில் நேற்றுமுன்தினம் பகல் 9.20 மணியளவில் இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் 3 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் நேற்று வெளியிட்ட களநிலைவர அறிக்கையில் தெரிவித்தது. (ஒ-10)


## தவறிவிட்டன

வில்வளை மாதகலைச் சேர்ந்த மார்க்கண்டு அருள்செல்வி என்பவருடைய தே.அ.அட்டை (இல. 796403721V), விபேட அ.அட்டை (இல. 0905023267) என்பன யாழ். பிரதான வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 75,கோயில் வீதி எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.
T.P. No. 2639 (91763)



நாகம்ஸ் சுன்னாகம்
மாதவன், ஜோதிகா, விவேக் நடித்த
டும் டும் டும்
(ரீலீஸ்)
காட்சிகள்:- 11.00, 2.30 (புதியநேரம்)
(91760)



ராஜா யாழ்ப்பாணம்
அஜித், மாளவிகா நடிப்பில்
உன்னைத்தேடி
தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி :- 10.30, 2.00, 5.00(பு.நே.)
(ஞாயிறு போயா தினம் காட்சிகள் இல்லை)
(C/17875)


# யாழ். நகரை அண்டிய பகுதிகளில் நேற்றுப் படையினர் தேடுதல்

யாழ்ப்பாணம்,ஒக.31

யாழ்ப்பாணம் கச்சேரி - நல்லூர் வீதி, இராசாவின் தோட்டம் பகுதிகளில் படையினர் நேற்று சுற்றிவளைப்பு - தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

நாவலர் வீதி, றக்கா வீதி, இராசாவின் தோட்டம் வீதி மற்றும் வைமன் வீதி ஆகிய வீதிகளை உள்ளிட்ட பகுதிகளில் உள்ள வீடுகளையே படையினர் தீவிர சோதனைக்கு உட்படுத்தினர்.

நேற்றுக்காலை 4 மணி முதல் அப்பிரதேசங்களில் குவிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான படையினர் நண்பகல் 12 மணிவரை அப்பகுதிகளில் தேடுதலில் ஈடுபட்டனர்.

வீடு வீடாகச் சென்ற படையினர் குடும்ப அட்டைகளையும், அடையாள அட்டைகளையும் பரிசோதித்து வீட்டிலுள்ளவர்களை விசாரித்ததாகவும் தெரிய வருகிறது. (ஏ-9)

# அரசியல் ஸ்திரத்தன்மையைப் பேண கோருகிறது அமெரிக்கத் தூதரகம்

கொழும்பு,ஒக.31

இலங்கையில் அரசியல் ஸ்திரத் தன்மையை பேணவேண்டும் என்று அமெரிக்கா மீண்டும் வற்புறுத்தியுள்ளதாக கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசுப் பிரதிநிதிகளுக்கும் ஐதே கட்சிப் பிரதிநிதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்கள் தோல்வியில் முடிவடைந்த பின்பே அமெரிக்கத் தூதரகம் இந்த அறிக்கையை விடுத்துள்ளது.

"நாட்டின் பிரச்சினைகளை எதிர்கொண்டு தீர்த்து வைப்பதற்கு வாய்ப்பாக இலங்கை அரசியல் ஸ்திரத் தன்மையை ஏற்படுத்தும் என்று நாம் நம்புகிறோம். விரைவில் ஸ்திரநிலை ஏற்படும் என்று நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறோம்" - என்று அமெரிக்கத் தூதரகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"இதற்கு முன்பு இருகட்சிகளுக்குமிடையே தகவல் பரிமாறிய அமெரிக்கத் தூதரகத்தின் பணி அவ்வளவுடன் முடிவுற்றது. மேலும் இவ்விவகாரங்களில் ஏதாவது பணி இருக்குமா என்பதை இப்போது உறுதியாகக் கூறமுடியாது" என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஒ-3)

## சிலாபத்தில் 50 தமிழர் கைது

சிலாபத்தில் உடப்பு, முந்தல் ஆகிய பகுதிகள் நேற்றுமுன்தினம் அதிகாலை சுற்றிவளைக்கப்பட்டன. அங்கு மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் ஐம்பது தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் வடக்கு - கிழக்கைச் சேர்ந்தவர்கள் என்று - பொலீஸார் தெரிவித்தனர்.

# வாசகர் திருமுகம்

## சிந்தை தெளிவோமாக!

கடந்த 19ஆம் திகதி "வாசகர் திருமுகம்" பகுதியில் வெளியான "ஏன் இந்தக் குழையடிப்பு?", கடந்த 22 ஆம் திகதி வெளியான "ஏன் இந்தப் பிழை பிடிப்பு?" என்னும் இரண்டு வாசகர் திருமுகங்களையும் வாசித்தேன். அண்மையில் யாழ்.சேவையில் இரவு ஒலிபரப்பான "கதிர் வீச்சு செய்தி விமர்சனம்" என்னும் நிகழ்ச்சியில் பத்திரிகையில் செய்தி எழுதும் பத்திரிகையாளரைப் பற்றியும் நாம் நன்கு அறிவோம் என்று பத்திரிகையாளர் மீது அபத்தமான குற்றச்சாட்டு கூறப்பட்டது.

எது எப்படியோ நக்கீரன் - ரூபன் இவர்களின் வாதப் பிரதிவாதங்கள் மூலம் மேற்படி நியாயமற்ற பொய்க் குற்றச்சாட்டு பிழையானது என்பது நிரூபணமாகிவிட்டது எனலாம்.

நக்கீரன்களும் - ரூபன்களும் எப்படியாவது வாதிட்டுப் போகட்டும். நமக்குக் கவலை இல்லை.

21 ஆம் திகதி 'வாசகர் திருமுகம்' பகுதியில் "யாழ் தமிழர்கள் முட்டாள்களா?" என நம் மனநிலை அறிந்து எழுதிய கமலா போன்ற சகோதரிகள் யதார்த்த நிலை அறிந்து வாழும் வரை நம்மூர் மக்களில் பெரும்பான்மையோர் என்றும் புத்திஜீவிகளாகவே இருப்பார்கள் என்பதில் சிறிதும் ஐயமே இல்லை எனச் சிந்தை தெளிவோமாக!

பண்டத்தரிப்பு. S.நாதன்.

## ஏன் இந்த மடமை?

கடந்த 22.08.2001 அன்று வெளியான 'வாசகர் திருமுகம்' பகுதியில் ரூபன் என்பவரால் எழுதப்பட்ட "ஏன் இந்தப் பிழைபிடிப்பு?" என்ற மடல் மூலம் தான் ஒரு முட்டாள் என்பதை வெளிப்படுத்தியுள்ளார்.

பாராட்டு, கௌரவிப்பு என்பன செயற்கரிய செயலாற்றியவர்களுக்கும் சேவைகள், உதவிகள் வழங்குபவர்களுக்கும் கொடுக்கப்படும் பிரதியுபகாரம் என்பது சரியானதாக இருக்கலாம்.

ஆனால் அரச உயர் அதிகாரிகளும், அமைச்சர்களும் தங்களுடைய கடமைகளைச் செய்வதனைப் பாராட்ட வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் செயற்திட்டங்கள், நிதி ஒதுக்கீடுகள் என்பவற்றை செயற்படுத்துவதற்காக மக்களின் வரிப்பணத்தில் சம்பளம் பெறும் - சுகபோக வாழ்க்கை வாழ்ந்து கொண்டு - இருப்பவர்கள் இவர்கள். எனவே இவர்கள் கடமையைத்தான் செய்கிறார்கள். இதற்கு பாராட்டு விளம்பரங்கள் அவசியமில்லாதவை.

கோயிலில் பிரசங்கம் செய்யும் பிரசங்கியாருக்கு பாராட்டுதல்கள், கௌரவிப்புக்கள் தெரிவிப்பது பற்றிக் குறிப்பிட்டு மக்களுக்கு சமய அறிவினையும் நல்லொழுக்கத்தினையும் புகட்டும் பெரியார்களை இவர் அசிங்கப்படுத்த முற்படுகின்றாரா?

தான் பாராட்டப்பட வேண்டுமென்ற நோக்கம் கொண்ட அமைச்சரின் வருகைக்கு முன்னர் ஆலயங்களில் வழிபாடுகள், பிரசங்கம், திருவிழா என்பன சிறப்பாக நடைபெறவில்லையா?

மோசடி, பதுக்கல் பற்றி ரூபன் குறிப்பிட்டிருந்தார். நடைபெறுகின்ற மோசடிகள், பதுக்கல் பற்றி இவர் அறியவில்லை போலும். (உதாரணமாக குறிகாட்டுவான் பயணிகள் தங்குமிடம் அமைத்தல் தொடர்பான மோசடி பற்றி வெளியான செய்தி.)

ரூபன் அவர்கள் கொழும்பை விட யாழ்ப்பாணத்துக்குத்தான் அதிக நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்ற கற்பனையில் வாழ்ந்து கொண்டு இருக்கிறார் போலும்!

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெறும் மாணவர்களைப் பாராட்டும் விளம்பரத்தால் அவர்களது அறிவும் திறமையும் பாராட்டப்படும். அதே வேளை குறிப்பிட்ட மாணவனும் ஏனைய மாணவர்களும் கல்வி முயற்சியில் தூண்டப்படுவார்கள்.

அமைச்சர் கடமையைத்தான் செய்து வருகின்றார். அவர் தனது சொந்த வைப்புப் பணத்தில் இருந்து உதவி செய்ய முன்வரும்போது பாராட்டுதல்களைப் பற்றிச் சிந்திக்கலாம்.

மனிதத்துக்கு அழகு சேர்ப்பது "கடமையைச் செய்; பாராட்டுதல்களை எதிர்பாராதே!" என்பதாகும். ரூபன் போன்ற அற்ப சொற்ப சலுகைகளுக்கு ஏமாறுபவர்கள் இருக்கும்வரை அற்ப சொற்ப சலுகைகளைக் காட்டி ஏமாற்றுபவர்கள் இருந்து கொண்டுதான் இருப்பர்.

தெல்லிப்பழை. வி.சத்தியன்.

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

# கேள்வி அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் அரச திணைக்களங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கேள்விகள் எதிர்வரும் 2001.09.11 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். இக்கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் அன்றைய தினமே பி.ப. 2.00 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும்.

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "தவிசாளர்", வலி.தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் என்ற முகவரிக்கும், இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித்தெரு, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கும் எதிர்வரும் 2001.09.11 ஆம் திகதி 12.00 மணிக்கு முனனர் நேரடியாகவோ, பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்க வேண்டும்.

| வேலையின் பெயர் | கேள்வி வைப்புப்பணம் | கேள்விப்பத்திரப் பணம் | பொருள்கள் சேவைகளுக்கான வரி |
|---|---|---|---|
| 01. கலைமதி முன்பள்ளிக்கு தளபாடம் செய்து விநியோகித்தல் | 500/= | 100/= | 12.50 |
| 02. கலைமதி முன்பள்ளிக்கு பூங்கா அமைத்தல் | 1000/= | 100/= | 12.50 |
| 03. ஞானவைரவர் முன்பள்ளிக்கு தளபாடம் செய்து விநியோகித்தல் | 500/= | 100/= | 12.50 |
| 04. கந்தரோடை இந்துமயானம் திருத்தம் | 4000/= | 500/= | 62.50 |
| 05. கலைமகள் பாலர் பாடசாலை கட்டடம் அமைத்தல் | 4000/= | 500/= | 62.50 |
| 06. ஜனசக்தி பாலர் பாடசாலை கட்டடம் திருத்தம் | 3000/= | 500/= | 62.50 |
| 07. காந்திருபன் பாலர் பாடசாலை கட்டடம் திருத்தம் | 5000/= | 500/= | 62.50 |
| 08. கலைவாணி சனசமூக நிலையம் கட்டடம் அமைத்தல் | 5000/= | 500/= | 62.50 |
| 09. அறிவொளி சனசமூக நிலையம் கட்டடம் அமைத்தல் | 5000/= | 500/= | 62.50 |

மேற்குறிப்பிட்ட கேள்வி வைப்புப்பணத்தையும், கேள்விப்பத்திரக் கட்டணங்களையும் செலுத்துவதன் பேரில் எதிர்வரும் 2001.09.10 ஆம் திகதி பி.ப. 12.30 மணிவரை எம்மால் வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப்பத்திரக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது. இது சம்பந்தமான மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

வலி.தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.
2001.08.30

(C/18075)

க.கமலசேகரன், ஜே.பி.யு.எம்.,
தலைவர்.

## கடலுக்கு அடியில் உள்ள சுரங்கம் வழியே

# பிரான்ஸிலிருந்து பிரிட்டனுக்குள் நுழைய முயற்சித்த 40 பேர் கைது!

லண்டன்,ஓக.31

பிரான்ஸில் இருந்து லண்டனுக்கு கடலடிச் சுரங்கப்பாதை ஊடாக செல்லமுயன்ற நாற்பது வெளிநாட்டவர்களைக் கைது செய்துள்ளதாக பிரான்ஸ் பொலீஸார் அறிவித்துள்ளனர்.

பிரான்ஸில் இருந்து கடலுக்கு அடியில் - லண்டனுக்கு செல்வதற்கு அமைக்கப்பட்டுள்ள ஏழு கிலோ மீற்றர் தூர சுரங்கப்பாதை ஊடாக இவர்கள் லண்டன் செல்லமுயன்றதாகவும் -

அந்தப் பாதையின் தொடக்கத்தில் அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு வேலிகளை ஊடுருவிச் சென்ற வேளையில் அவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் - பொலீஸார் தெரிவித்தனர்.

இவர்கள் எந்த நாட்டவர்கள் என்பதைக் கண்டறிய விசாரணைகள் இடம்பெற்றுவருவதாகவும் -

இவர்களில் இலங்கையைச் சேர்ந்த சிலரும் இருக்கலாம் என்றும் - வெளிநாட்டுச் செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

இந்தச் சுரங்கப் பாதையூடாக லண்டன் செல்லமுயன்ற சுமார் முந்நூறு பேர் கடந்த சில மாதங்களில் கைது செய்யப்பட்டிருந்ததாகவும்- பிரான்ஸ் பொலீஸார் தெரிவித்தனர்.

அதேவேளை - 'டிங்கி' ஒன்று மூலம் பிரிட்டனின் டோவர் துறைமுகத்தில் சட்டவிரோதமாக வந்து இறங்கிய ஐவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பிரிட்டிஷ் பொலீஸார் தெரிவித்தனர். (ஒ-3)

# கட்டுநாயக்கா தாக்குதல் பின்னணியில் அந்நிய சக்தி ஒன்றின் அனுசரணை

## இப்படிக் கூறுகிறது சிஹல உறுமய

கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் மற்றும் சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் பின்னணியில் வெளிநாடு ஒன்றின் அனுசரணை இருந்ததாக சிஹல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் சம்மிக ரணவக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

1985 ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகளுடன், அப்போது பதவியிலிருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசு, பேச்சு நடத்துவதற்கான அழுத்தத்தை உருவாக்குவதற்காக அநுராதபுரத்தில் விடுதலைப் புலிகள் அந்த வேளையில் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டதாகவும் -

இதேபோன்றே, தற்போதைய அரசை, விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தும் வகையில் அழுத்தம் கொடுப்பதற்காக வெளிநாடு ஒன்றின் உதவியுடன் கட்டுநாயக்கா தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும்-

சம்மிக ரணவக்க மேலும் தெரிவித்தார்.

கட்டுநாயக்கா தாக்குதல் சம்பவத்தை மேற்கொண்டவர்களைக் கண்டிக்காமல் அதனால் பாதிப்படைந்த தரப்பினர் மீது பொருளாதார அழுத்தங்களை வெளிநாடுகள் ஏற்படுத்தி வருவதைக் கண்டித்த அவர் இரு பிரதான கட்சிகளும் நாட்டைப் பிரித்துக் கொடுக்கவே முயற்சிப்பதாகக் குற்றஞ்சாட்டினார். (ஒ-10)

# போராட்டத்தைக் கைவிடுமாறு மருத்துவரிடம் அமைச்சர் கோரிக்கை

கொழும்பு,ஓக.31

வேலைநிறுத்தப் போராட்டத்தைக் கைவிடுமாறு அரசு மருத்துவ அலுவலர்கள் சங்கத்தை சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கேட்டுள்ளார்.

தமது கோரிக்கைகள் அரசால் நிறைவேற்றப்படாததால் நேற்று முதல் கொழும்பு தேசிய மருத்துவமனை மருத்துவர்கள் வேலைநிறுத்தத்தை மேற்கொண்டுள்ளனர்.

இதனையடுத்தே அமைச்சர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் நேற்றுமுன்தினம் முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக அரசு மருத்துவர்கள் ஏற்கனவே அறிவித்திருந்ததுடன், அதன்படியே கொழும்பு தேசிய மருத்துவமனை மருத்துவர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

போதனா வைத்தியசாலைகள் உட்பட அனைத்து அரசு மருத்துவமனைகளில் பணியாற்றும் மருத்துவர்களும் விரைவில் வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக, அரசு மருத்துவ அலுவலர் சங்கப் பேச்சாளர் டாக்டர் அனுருத்த பதேனியா கூறினார்.

கடந்த திங்கட்கிழமை அமைச்சருக்கும், மருத்துவர்களுக்கும் இடையே நடந்த பேச்சு வெற்றியளிக்காததாலேயே வேலைநிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## அமெரிக்காவின் தலையீடு குறித்து

# அரசு மற்றும் ஐ.தே.கவுக்கு ஜே.வி.பி.கடும் கண்டனம்

கொழும்பு,ஓக.31

அரசுக்கும், ஐ.தே. கவுக்குமிடையிலான பேச்சுக்கு ஏற்பட்டாளராக அமெரிக்காவைச் செயற்பட அனுமதித்ததற்கு ஜே.வி.பி.கண்டனம் தெரிவித்துள்ளது.

கட்சிகளின் பெயரைக் குறிப்பிடாமல், ஒரு கட்சி கேட்டுக் கொண்டதற்கு இணங்க, அது தந்த தகவலை மற்றொரு கட்சியிடம் சேர்ப்பித்ததாக அமெரிக்கத் தூதரகம் கடந்த வாரம் தெரிவித்ததையடுத்தே ஜே.வி.பி. இந்தக் கண்டனத்தை வெளியிட்டது.

இதேசமயம் அரசுக்கும்,ஐ.தே. கவுக்குமிடையிலான பேச்சு தோல்வியில் முடிவடையும் என்று முதலிலேயே எதிர்பார்த்ததாகவும் -

நாட்டில் நிலவும் பாரிய பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இரு தரப்பும் உண்மையான ஈடுபாடு காட்டாததே அதற்குக் காரணம் என்றும் -

ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

சி.வி.வேலுப்பிள்ளையின்
✻ வீடற்றவன் ✻
நாவலின் விளக்கமும் விமர்சனமும்
ஆக்கம்:
✻அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை
10ஆம், 11ஆம் தர மாணவர்கள்
தமிழ் இலக்கியம் கற்கப் பயன்படும்.
50 பக்கங்கள் ரூபா 25/=
(91748)

### பகுப்பாய்வாளரின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரிக்குச் சுட்டிக் காட்டியுள்ளார்.

நேற்றுமுன்தினம் நீதிவானால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பிரகாரம் குறித்த ஆயுதங்களை செயலிழக்க செய்யும் போது அவை சேதமடையும் என்று காங்கேசன்துறை குற்றத்தடுப்புப் பிரிவு பொலீஸ் பொறுப்பதிகாரி நேற்று நீதிவானின் கவனத்துக்குக் கொண்டு வந்ததை அடுத்து -

பொறுப்பதிகாரியை நேரடியாகக் கொழும்பு சென்று அரச இரசாயன பகுப்பாய்வாளருக்கு நிலைமையை விளங்கப்படுத்தி அவரையோ அல்லது அவரது பிரதிநிதியையோ காங்கேசன்துறைக்கு அழைத்து வந்து பரிசோதனை செய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

திவ்வியன் தொடர்பாக அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கு உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றால் விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக திவ்வியன் சார்பில் ஆஜரான சட்டத்தரணி செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் யாழ். நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

இதனால் இந்த வழக்கின் சான்றுப் பொருள்கள் எதனையும் அரச இரசாயன பகுப்பாய்வாளர் பரிசோதித்து அவரிடம் இருந்து அறிக்கை பெறாது அவற்றை அழிக்க முடியாது என்று நீதிவான் சுட்டிக்காட்டினார்.

இரசாயனப் பகுப்பாய்வாளரின் அறிக்கையை எதிர்வரும் 11 ஆம் திகதி மன்றுக்குத் தவறாது சமர்ப்பிக்க வேண்டும் என்றும் காங்கேசன்துறை குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரிக்கு நீதிவான் உத்தரவிட்டார். (உ-6)

324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
MOBILE NET MCS COMPUTER SERVICES
இலவச கணனிப்பயிற்சி
ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச திணைக்களங்களை கணனிமயப்படுத்துவதில் பெரும் பங்காற்றிய எமது நிறுவனத்தினர் A/L பரீட்சையை நிறைவு செய்யும் மாணவர்களுக்காக விசேட கணனிப் பயிற்சித் திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளார்கள்.
(C/18077) ஆரம்பம்: 07-09-2001. 'பதிவுகளை 05.09.2001ற்கு முன் மேற்கொள்ளவும்.

## முன்னாள் காதலன் சீவி எறிந்த

# இளம் பெண்ணின் ... பொருத்தப்பட்டது

திருகோணமலை,ஓக.31

திருகோணமலையில் முன்னாள் காதலனின் சீற்றத்துக்கு இலக்காகி துண்டாடப்பட்ட இளம்பெண்ணின் கை 'மைக்ரோ சேர்ஜரி' மூலம் நேற்றுமுன்தினம் பொருத்தப்பட்டுள்ளது.

ஒரு கை துண்டிக்கப்பட்ட நிலையிலும், மற்றைய கை வெட்டப்பட்டு தொங்கிய நிலையிலும் ஹெலி மூலம் கொழும்பு கொண்டு செல்லப்பட்ட அந்தப் பெண் கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார்.

துண்டிக்கப்பட்ட கையைப் பொருத்தும் சத்திரசிகிச்சை வெற்றிகரமாக பூர்த்தியானது என்று டாக்டர்கள் தெரிவித்தனா.

அதேவேளை - அந்தப் பெண்ணின் முன்னாள் காதலனை தேடிப் பொலீஸார் வலை விரித்... பதிவுத் திருமணம் முடிந்... தாயபூர்வ திருமணம் ... விருந்த 19 வயது ... கைகளையும் அவரது ... காதலன் என்று கூறப்படும் ... ஒருவர் நேற்றுமுன்தினம் விடு... வெட்டியது தெரிந்ததே.

### யோகாசன வகுப்பு

யாழ்ப்பாணம்,ஓக.31

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் ஆண், பெண் இருபாலாருக்கும் வெள்ளி, சனி தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 6மணி முதல் 7 மணிவரை யோகாசன வகுப்புக்கள் நடைபெறுகின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (-3)

### அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டன் பேச்சு என்ற அறிவிப்பை விடுத்துள்ளது என்றும் அவை கூறியுள்ளன.

ரெலோ அமைப்பின் முதல்வர் என்.ஸ்ரீகாந்தா கருத்துத் தெரிவிக்கையில், கடந்த ஜூனில் பெரும்பான்மையை இழந்ததால் இந்த அரசு சமாதான நடவடிக்கை தொடர்பான விடயங்கள் குறித்தும் பேசும் தகுதியை இழந்துவிட்டது - என்றார்.

இதேவேளை தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச் செயலாளர் ஆர்.சம்பந்தன் கருத்துக் கூறுகையில், இந்த ஆண்டின் முற்பகுதியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட ஒருதலைப்பட்சமான போர்நிறுத்தத்துக்கு சாதகமான பதில் நடவடிக்கையை அரசு அப்போது மேற்கொண்டிருந்தால், இப்போது நல்ல பலன்களைப் பெற்றிருக்க முடியும் என்று தெரிவித்தார். (ஒ-3)

### கல்முனையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காயமடைந்த கல்முனைப் பிரதேசச் செயலக சிற்றூழியரான - கலைமான லெப்பை என்பவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி இறந்தார்.

குண்டுவெடிப்பைத் தொடர்ந்து அப்பகுதியில் பொலீஸார் தேடுதல் நடத்தினர். எனினும் எவரும் கைது செய்யப்பட்டதாகத் தகவல் இல்லை. (உ-ஒ-10)

### நீர்கொழும்பு சிறையில் கைகலப்பு!

கொழும்பு...

குடிவரவு, குடியகல்வுச் ச... கீழ் நீர்கொழும்புச் சிறைச்சா... தடுத்துவைக்கப்பட்டுள்ள ... பெண்கள் சிங்களப் பெண்... களால் மோசமான முறையில் ... கப்பட்டதாக வெளிநாட்டு ... ஏஜென்ஸி ஒன்று தெரிவித்த...

தண்ணீர் எடுப்பதில் இ... ருக்கும் இடையில் ஏற்பட்ட ... தர்க்கம் கைகலப்பாக ம... 3 தமிழ்ப்பெண் கைதிக... மடைந்ததாகவும் -

இச்சம்பவம் தொட... சாலை நிர்வாகம் ந... னையும் மேற்கொள்ள... றும் தெரிவிக்கப்பட்ட...

புதிய குடிவரவு, கு... டத்தின் கீழ் நீர்கொழும்புச் ... யில் 60க்கு மேற்பட்ட ... தடுத்துவைக்கப்பட்டிருப்பது ... பிடத்தக்கது.

### அரசு விடுத்த....

(முதலாம் பக்கத் தொட...

"சந்திரிகா குமாரதுங்க... நீண்டகாலமாக - தொட... எமது சமாதான முயற்சி... ஷ்ந்தது. இராணுவ வாதத்தில் ... முர் நிலங்களை விழுங்கும் ... டுப்புகளிலும் நம்பிக்கை ... ததால் போர்நிறுத்தம் ... விடுத்த அழைப்புகளை நிரா... வந்தது. ஆனால் இப்பொழு... மோசமான அரசியல் நெருக்க... சந்தித்து நிற்பதால் இந்த அர... அதிகாரத்தில் தொடர்ந்து இ... காக இக்கட்டான வழிமுறை... கடைப்பிடிக்க முயல்கின்றது ... பாலசிங்கம் சொன்னார்.

எதிர்க்கட்சியின் கூட்டணியில் ... தமிழ்க் கட்சிகளை பிளவுபடு... நோக்குடனேயே அரசாங்கம் ... அரசியல் நாடகத்தை அரங்... முயல்கிறது என்றும் அவர் ... சாட்டினார்.

போர் நெருக்கடியைத் தவிப்... நீண்டகாலமாகவே மறுத்துவந்த ... இப்பொழுது சமாதான சமிக்... காட்டி மக்களை ஏமாற்ற மு... றது" என்றும் அவர் தெரி...

எமது பிரமிட் & Five Star
வீடியோ CD வெளியீடுகள்
தோஸ்த்
கன்னா உன்னைத் தேடுகிறேன்
குருஷேத்திரம் (C/18079)
வீடியோ வீமல்
யாழ்ப்பாணம்.

செல்வச்சந்நிதி தேர்த்திறன்
இந்துக்களின் இல்லங்களிலும் இருக்க வேண்டிய நூல்.
சந்நிதி ஆலய நிர்வாக அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். (91753)

LOGIC
A/L 2003
'அனுமானம்'
எஸ்.எஸ்.மனோகரன்
ஆரம்பம்:
03.09.2001 காலை 9 மணி
BEACON யாழ்நகர்
(91735)

தரம் 1 முதல் O/L வ...
3ஆம் தவணைக்கான
வகுப்புகள் ஆரம்பம்
01-09-01
சனி பிற்பகல் 3 மணி
☆ புதிய மாணவர்கள் அ... கப்படுவர்.
☆ மாதாந்த, தவணைப் ... பரீட்சைகள் நடத்தப்ப...
☆ எமது திறமைமிகு ஆசிரிய... ஒருங்கிணைந்த சேவை...
நாவலர்
ஆனைப்பந்தி. (91771) யாழ்...

SUBRA (14...
சித்தன்கேணி
2001 A/L
பொதுச் சாதாரண பரீ...
வழிகாட்டி வகுப்பு...
3, 4, 5 காலை 8.00 – 10.0...
✻ உங்கள் ஆசிரியர் ...
அனுமதிகள் இலவச...
2002 A/L
Paper Class
Geography
Sat., Sun. - 2 - 3...
Mon., Wed., Fri. - ...
S.ஐங்கரன்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.08.2001இல் வெளியிடப்பெற்றது.